Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

[illegible]
FedEx. Express
விரைவானது · பாதுகாப்பானது · நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாட[illegible]ண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310
E.mail:thirumurugan5@lycosmail.com

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 19 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 19 (05.10.2004) செவ்வாய்க்கிழமை இதழ்: 05

## புலிகளின் யோசனைப்படி பேசுவதற்கு

# எதிர்க்கட்சிகள் வழங்குகின்ற ஆதரவை

# அரசு சரியாகப் பயன்படுத்த வேண்டும்!



## பி.பி.சி. பேட்டியில் தமிழ்ச்செல்வன்

(லண்டன்)

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப் படையில் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கு எதிர்க்கட்சிகள் பூரண ஆதரவு தெரிவித்துள்ள நிலையை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

## ஜெனிவா கலந்துரையாடல் முடிந்து பாலசிங்கம் லண்டன் திரும்பினார்!

(ஜெனீவா)

ஜெனீவாவில் சட்ட நிபுணர்களுடனான கலந்துரையாடலை முடித்துக் கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியரு மான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் லண்டன் பயணமா னார்.

வன்னியிலிருந்து சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் ஜெனீவாவில் சட்ட நிபுணர்கள், மனித உரிமைகள் ஆர்வலர் களைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் லண்டனில் இருந்து சென்ற கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் முடிவடைந்த சட்டநிபுணர் (12 ஆம் பக்கம் பார்க்க)



அரசியல் விவகாரக் குழுவுடனான இயன் மார்ட்டினின் சந்திப்பின்போது

# புலிகள் பேச்சுக்கு திரும்புவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படும்!

## ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் சந்திரிகா



(கொழும்பு)

பேச்சுவார்த்தைக்கு திரும்புமாறு விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சமாதானத்துக்கும், நல் லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைப் பேரவையின் அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - அரசாங்கம் எத்தகைய நடவடிக் கைகள் எடுத்தாலும் அவை ஐக்கிய இலங்கையின் கட்டமைப்புக்குள் அமுலாக்கப்படும். தேசத்தின் பாதுகாப்பும் நாட்டின் இறைமையும் உத்தர வாதம் செய்யப்படும்.

சமாதானத்தை அடையும் முயற்சிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)



# அரசுக்குள்தான் பிரச்சினை எதிர்க்கட்சியில் இல்லை!

## பேராசிரியர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரச்சினை என்ன என்பதை அறிந்தே அதனைத் தீர்க்கவேண்டும். அரசாங்கத்துக் குள்தான் பேச்சுக்களைத் தொடர்வதில் பிரச் சினைகள் உள்ளன. எதிர்க்கட்சிகள் செய்வ தற்கு எதுவுமில்லை என்று ஐ.தே.க. நாடாளு மன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய ஆலோசனைக் கூட்டத்தில் ஐ. தே.க. பங்குபற்றாதது குறித்து பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிட்டபோதே இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் விவகாரக் குழுவின் கூட்டத்தில் எங்களின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஒத்துழைப்பை வரவேற்கிறார் ஹெல்கிசன்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் கைக்கு எட் டாத நிலையிலும் விடுதலைப்புலிகள் அதற் கான முயற்சிகளை முன்னெடுத்து வருவது மகிழ்ச்சியைக் கொடுப்பதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கிசன் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற விடு தலைப் புலிகளின் சட்டநிபுணர்களுடனான கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்துரை வழங்கியபோதே ஹெல்கிசன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த சந்திப்புக்குத் தலைமை வகித்த சட்டவல்லுநர் உருத்திரகுமாரன் பேசுகையில் சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதில் புலிகள் உறுதியாக இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் சுவிஸ் பல் கலைக்கழக பேராசிரியரும், சுவிஸ் கூட் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்க பொதுக் கூட்டம் யாழ்.பல்கலைக்கழகத்தில்!

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கக் கூட்டத்தை இந்த முறை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இணங்கியுள்ளது. எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் பகல், இரவு என இரண்டு நாட்கள் இந்தக் கூட்டம் நடைபெறும்.

இந்தக கூட்டத்துக்கு - நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் வருகை தரவுள்ளனர். இந்தக் கூட்டத்துக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக, நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஊழியர் சங்கம் கலந்துரையாடியுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகள் மாலை 6 மணிக்கு தமது கூட்டத்தை ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து 24 ஆம் திகதியும் கூட்டம் நடைபெறுமென தெரிவிக்கப்படுகிறது.

## திருக்குறள் போட்டிகள் இந்தமாத இறுதியில்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான திருக்குறள் மனனப் போட்டிகள் இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலின் படி - இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பாடசாலை மாணவர்களை போட்டிகளுக்கேற்ற வகையில் தயார்படுத்துமாறு, அந்தந்த பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான சுற்று நிருபம் விரைவில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படும் என யாழ் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை பல்கலைக்கழக தினம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் 2004 ஆம் ஆண்டுக்கான 'பல்கலைக்கழக தினம்' நாளை பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் கொண்டாடப்படவுள்ளது.

இதில், வாழ்த்துரைகளை உயர் பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் , பேரவை உறுப்பினர் திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர், பல்கலைக்கழக எழுது வினைஞர், தொழில்நுட்ப அலுவலர், ஒன்றியத்தலைவர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் - பல்கலைக் கழகத்தில் 25 வருட சேவையைப் பூர்த்திசெய்து இளைப்பாறிய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள் வழங்கும் இசை - நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## நல்லூர் ஆடியபாதம் வீதியில்

## மதுபானநிலையம் அமைக்கும் முயற்சிக்கு பொது அமைப்புக்கள் கடுமையான எதிர்ப்பு!

நல்லூர் ஆடியபாதம் வீதியில் புதிதாக மதுபானம் விற்பனை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிக்கு அந்தப்பகுதி பொது அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதற்கு நல்லூர் பிரதேச செயலர், யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றமும், ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி ஆலய நிர்வாகம் என்பனவற்றுடன் இந்தப்பகுதியைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட மக்கள் ஒப்பமிட்டு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து நல்லூர் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய நிர்வாகத்தினர் நல்லூர் பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நல்லூர் ஆடியபாதம் வீதியில் நல்லூர் சந்தைக்கு அருகாமையில் ஒரு மதுபான விற்பனை நிலையம் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்போது குடாநாட்டில் கலாசாரம் சீரழிவதற்கும், கொலை, கொள்ளை, பாலியல்வல்லுறவு, விபத்து, விவாகரத்து இன்னும் இளம்வயதினர் மதுபோதைக்கு அடிமையாகி வீடுகளிலும் மற்றும் வீதிகளிலும் செல்பவர்களுடன் சேட்டை புரிவதும், அட்டகாசம் செய்வதும் இவ்வாறான மதுபான விற்பனை நிலையங்கள் அதிகரித்துள்ளமையால் ஏற்படுகிறது.

எனவே, மதுபான விற்பனை நிலையம் அமைப்பதை எவ்வளவுக்கு எவ்வளவு கட்டுப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு சமுதாயத்துக்கு நன்மை ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

சில வருடங்களுக்கு முன்பாக அனுமதியளிக்கப்பட்ட இரண்டு மதுபான விற்பனை நிலையங்கள் இந்தச் சந்தைக்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் இயங்குகின்றன.

யாழ்.நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், செங்குந்தா இந்துக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகள் சந்தைக்கு அருகாமையில் உள்ளன. இவைதவிர சக்தி கல்வி நிலையம் ஒன்றும், இந்த ஆலயமும் - ஆடியபாதம் வீதியில் சந்தைக்கு அருகாமையில் உள்ளது.

இதனால், இந்தப்பகுதியில் புதிதாக மதுபானசாலை அமைப்பது பொருத்தமற்றது எனத் தெரிவித்துள்ளனர். (64)

## பஸ்சேவைக் கட்டணம் இன்று முதல் அதிகரிப்பு!

வட.பிராந்திய போக்குவரத்துச்சபை அனைத்து பேருந்து சேவைகளுக்குமான கட்டணத்தை இன்று அதிகாலை முதல் அதிகரித்துள்ளதாக வட.பிராந்திய போக்குவரத்துச்சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

### கட்டண விபரம் வருமாறு:-

| தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|
| 3.50 | 4.00 | 21.00 | 22.00 |
| 5.00 | 5.00 | 21.50 | 22.50 |
| 6.00 | 7.00 | 23.00 | 24.00 |
| 8.00 | 9.00 | 23.50 | 24.50 |
| 9.00 | 10.00 | 24.00 | 25.00 |
| 10.00 | 11.00 | 27.00 | 28.00 |
| 12.00 | 13.00 | 28.00 | 30.00 |
| 13.00 | 14.00 | 30.00 | 32.00 |
| 14.00 | 15.00 | 30.50 | 32.50 |
| 15.50 | 16.50 | 31.00 | 33.00 |
| 17.00 | 18.00 | 33.50 | 35.50 |
| 19.00 | 20.00 | 35.00 | 37.00 |
| 20.00 | 21.00 | 41.00 | 44.00 |

## வல்லைப் பாலம் திருத்தும் வேலை மழை வெள்ளத்தால் தாமதம்!

(வடமராட்சி)

வடமராட்சியை வலிகாமத்துடன் இணைக்கும் ஒரேயொரு பாலமான வல்லைப்பாலம் மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இதனைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும், மழை காரணமாக திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகாலயுத்த அனர்த்தங்களால் மிகமோசமாக சேதமடைந்து கடந்த பலவருடங்களாக திருத்தப்படாமல் தற்காலிகமாக திருத்தப்பட்டது.

ஆனாலும், தற்போது மிக மோசமாக சேதமடைந்து வருகிறது. தற்போது இதற்கான நிதியை ஒதுக்கியுள்ள போதிலும் மழை காலத்திலேயே திருத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பாதையால் ஏராளமான பஸ்கள், வாகனங்கள், பாரவூர்திகள் என்பன பிரயாணம் செய்கின்றன.

இந்தப்பாதை தடைப்படுமானால் வடமராட்சி மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குவர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம்செலுத்தி பாதுகாப்பான போக்குவரத்து வசதிக்கு வழி செய்யவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயத்திற்கு உட்பட்ட யாழ்.கோட்ட பாடசாலைகளின் உதைப்பந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பமாக உள்ளன.

இறுதிச்சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் 4.30 மணி முதல் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் 14 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும், 16 வயது பிரிவில் நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தை எதிர்த்து புனித சாள்ஸ் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன. (58)

## யாழ்.நகர பஸ்நிலையத்திற்கருகில்

## போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த வியாபாரிக்கு 2000 ரூபா அபராதம் விதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கருகில் வீதி ஒழுங்குக்குப் பாதகமான முறையில் சப்பாத்து வியாபாரத்தில் ஈடுபட்டவரது. சப்பாத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபையினரின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது யாழ்.நகரப்பகுதியில் வீதி ஒழுங்குக்கு முரணான வகையில் நடைபாதையோரமாகவும், வாகனப்போக்குவரத்து பகுதியிலும் பொருட்களை வைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது பொலிஸாரும் மாநகரசபையினரும் இணைந்து சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக, கடந்தவாரம் பழக்கடை வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டனர். நேற்று சப்பாத்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரது குற்றத்திற்கு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

தர்மப்பணத்தை யாழ்.சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் செலுத்து மற்றும் அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சப்பாத்துக்களை திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்துக்கு வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ப)


### துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியரான குருசாமி துஷ்சாந்தியின்
அன்புத் தந்தையான

### அமரர் வைத்திலிங்கம் குருசாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

63, பலாலி வீதி,
திருநெல்வேலி. (C/3218)
வெண்புறா நிறுவன ஊழியர்கள்

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
அர்ஜுன்,
லாரா தத்தா,
விவேக்,
ரகுவரன்
நடித்த

அரசாட்சி
காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)

நிரஞ்சனாஸ் சங்கானை
தனுஷ், சாயாசிங் நடித்த
திருடா திருடி
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-2723)
MEET THE PARENTS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)


## கைதடி முதியோர் இல்லத்தின் பொன் விழாவும், முதியோர் விழாவும்

(வண்ணை)

கைதடி அரச முதியோர் இல்ல பொன்விழாவும், சர்வதேச முதியோர் விழாவும் எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 2 மணிமுதல் முதியோர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இல்ல அத்தியட்சகர் கே.வி.சிவனேசன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின்போது - சாவகச்சேரி பிரதேச செயலக கணக்காளர் கில்பட்குணம் பொன்விழா மலரை வெளியிட்டுவைப்பார். முதியோர் தினத்தை முன்னிட்டு அவர்களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்றவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். (111)

## கல்விச்சேவை ஊழியர்களின் பேரணிக்கு யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் ஆதரவு!

(யாழ்ப்பாணம்)

கல்விச்சேவை ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினர் இன்று கொழும்பு கொள்ளுப்பிட்டியில் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக்கழக ஊழியர்சங்கம் செய்திக்குறிப்பு ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கல்விச்சேவை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு எமது தார்மீக ஆதரவை வழங்குவதுடன், கல்விச்சேவை ஊழியர்களின் கோரிக்கைகள் வெற்றிபெறவேண்டும்.

தமிழ் மொழிமூலக் கல்விச்சேவை ஊழியர்களின் பிரத்தியேகப் பிரச்சினைகளுக்கும், இப்போராட்டத்தில் முக்கிய இடம் அளிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் - யாழ்.பிரதேச செயலக வரவு - செலவு அறிக்கைகள் என்பவற்றோடு யாழ். பிரதேச செயலக நலன்புரிச்சங்க புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறுமென நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் இ.கருணாகரன் தெரிவித்தார்.

# முன்னாள் அரசியல்வாதிகளின் ஆயுதங்களை களைய நடவடிக்கை!

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

நாட்டில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சு இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 88, 89 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பியினரின் கிளர்ச்சியின் போது, பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை மீளவும் கையளிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அரசாங்கத்தால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (01)

## ரயில் சேவைக்கு 6.5 பில்லியன் ஒதுக்கீடு

ரயில் சேவைகளை நவீனமயப்படுத்துவதற்கு 6.5 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறுகிய கால அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் ரயில் பயணிகளுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும் என போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மலிவானதும், விரைவானதுமான போக்குவரத்து சேவையை வழங்கும் முகமாகவே ரயில் சேவைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தற்காலிக தீர்வு குறித்து பேசுவதற்கு தயாரில்லை!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் எடுக்கும் என - பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

களுத்துறை -மலேகமப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகளை அழைத்து வருவதற்கும், அரசு அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கும் எடுக்கும் கால எல்லைபற்றி எதுவும் கூறிவிட முடியாது.

தற்காலிகத் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சில் ஈடுபட நாம் தயார் இல்லை. நிரந்தரத் தீர்வொன்றை நோக்கியே நாம் செல்லவேண்டும். அதுவே எமது எண்ணமாகும். இது குறித்து தற்போது பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

நாங்கள் குழப்பமடையவில்லை. யுத்தமொன்றையோ, பிரச்சினைகளையோ ஏற்படுத்தமாட்டோம் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# மலையக மக்களின் உரிமைகளுக்காக புலிகளுடன் இணைந்து போராடத் தயார்!

## சந்திரசேகரன் தெரிவிப்பு



(கொழும்பு)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு உட்பட, சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்காக - தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து செயறபடுவதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராகவுள்ளது என - அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு. கோரி நேற்றுமுன்தினம் ஹற்றன் நட்சத்திர சதுக்க மேடையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை அரசாங்கமும், கம்பனிகளும் வழங்குவதற்கு முன்வரவேண்டும். இல்லையென்றால், அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு, தீர்க்கமான போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

இதற்கான அடையாள போராட்டமே இன்றைய போராட்டமாகும். கூட்டு ஒப்பந்தம் ஒன்றின் மூலமாக தோட்டத் தொழிலாளர்களை அடிமைப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது.

தோட்டக் கம்பனிகள் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் நியாயமாக நடந்துகொள்ளாவிட்டால், தோட்டங்களிலிருந்து கம்பனிக்காரர்கள் வெளியேற்றப்படுவர் என்றும் சந்திரசேகரன் எச்சரித்தார்.

# பிரதியமைச்சர்கள் மீது அமைச்சர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சர்கள் சிலருக்கும், பிரதி அமைச்சர்கள் சிலருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுளளது.

சில அமைச்சர்கள் மீது வீணான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வரும் இரண்டு பிரதியமைச்சர்கள் - மேற்கொண்டதாகக் கூறப்படும் ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பாக தாம் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாக அமைச்சர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட பிரதியமைச்சர்கள் இருவரும் அமைச்சர்களின் மீது குற்றங்களைச் சுமத்தி, தமது குற்றங்களை மறைக்க முயல்வதாக அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அது ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர்கள் குழு தெரிவித்தது. (01)

# அடையாள அட்டை கோருவது வாக்குரிமையை பாதுகாக்கும்!

## ஆளும் கூட்டணி அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் உத்தேச சட்ட மூலம - சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கூட்டணியின் பேச்சாளர்களான மங்கள சமரவீரவும், விமல் வீரவன்சவும் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் - உத்தேச சட்டமூலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்த கண்டனங்களை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இந்த நகல் சட்டமூலம் -நாடாளுமன்றத்தில் எதிர்வரும் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இந்த நகல் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை தடுக்க மேற்கொண்ட முயற்சி தோல்வி கண்டதையடுத்தே, ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு கண்டனங்களைத் தெரிவித்து வருகிறது.

தேசிய அடையாள அட்டை - தேர்தலில் கட்டாயமாக்கப்படுவதால், வாக்கெடுப்பில் மோசடிகள் இடம் பெறாது.

இந்தச் சட்டமூலம் நிறைவேறிய ஒரு வருட காலத்துக்குள் சகல பிரஜைகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கப்படும் என்று பிரதம மந்திரி உறுதியளித்துள்ளார் என்றும், அந்த அறிக்கையில் மேலும் கூறப்படுகிறது.

# வீதி அபிவிருத்தி திட்டங்களில் பெருமளவிலான மோசடிகள்!

## அமெரிக்க அதிகாரி தெரிவிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், தென்பகுதி வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற கொள்ளப்படும் திட்டங்களில், பெருமளவு மோசடிகள் இடம்பெற்று வருவதாக, இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட அமெரிக்க நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

90 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தென்மாகாணத்திலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீதி அபிவிருத்தித் திட்டப் பணிகளிலேயே பெரும் மோசடிகள் இடம் பெற்றிருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநராக ரிச்சட் லூகர் இதுபற்றித் தெரிவிக்கையில் -

இலங்கையில் வீதி அபிவிருத்தித் திட்டத்தில் பெருமளவு மோசடிகள், முறைகேடுகள் காணப்படுகின்றன.

பிரதமர் அலுவலகத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்ட ஒப்பந்தகாரர் ஒருவருக்கே இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருக்கிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சேதுசமுத்திரத் திட்டத்தால் கொழும்புத்துறைமுகம் பாதிக்காது!

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், கொழும்புத்துறைமுகத்துக்குப் பாதிப்பு ஏற்படும் எனக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை. அப்படி எந்தவித பாதிப்பும் கொழும்புத் துறைமுகத்துக்கு ஏற்படாது என, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்தார்.

சென்னையில் தங்கியிருக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே - செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

சேது சமுத்திரத் திட்டத்தை சிங்களவர்கள் தான் எதிர்ப்பதாகவும், அவர்களே தமிழகத்தில் இந்தத் திட்டத்தால் தீமை ஏற்படும் என - சிலரைத் தூண்டி விடுவதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எம்.கருணாநிதி தெரிவிதத குற்றச்சாட்டுக் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அமைசசர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு பாதிப்பு ஏற்படாத திட்டம் ஒன்றை சிங்களவர்கள் எதிர்ப்பதாக கூறுவது பொருத்தமற்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (01)

# ஊர்காவற்படையினரை விடுவிக்க சிங்கள அமைப்புக் காலக்கெடு

## இல்லையேல் பாரதூரமான விளைவு ஏற்படுமாம்

(திருகோணமலை)

திருகோணமலையில் கைது செய்யப்பட்ட ஊர்காவல்படையினர் இருவரையும் நாளை மறுதினத்துக்கு முன்னர் விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காதுவிடின், பாரதூரமான செயற்பாடுகளில் ஈடுபடப் போவதாக வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு எச்சரித்துள்ளது.

அரசின் அமைச்சர்களான மங்கள சமரவீர, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் திருகோணமலைக்கு வந்து, ஊர்காவற் படையினர் இருவரையும் - 14 நாட்களுக்குள் விடுவிப்பதாக வாக்குறுதி யளித்தும் இன்னமும் அதற்கு சாதகமான விதத்தில் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லையெனவும், எதிர்வரும் 7 ஆம் திகதியுடன் அவர்கள் வழங்கிய வாக்குறுதி முடிவடைவதாகவும் இந்த அமைப்பின் இணைப்பாளர் சுனித் சுளுத்கமகே தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படாதுவிடின், திருமலையிலிருந்து கொழும்புக்கு மா, எரிபொருள் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் இந்தச் சிங்கள அமைப்பு முன்னர் எச்சரிக்கை விடுததிருந்தது.

எனவே இதற்கு எந்தவிதத்திலேனும் தீர்வு காணப்படாதுவிடின், இதைவிட மோசமான நடவடிக்கைகளில் தாம் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்த அந்த அமைப்பு - இது குறித்து எந்தவித பேச்சுவார்த்தையும் நடத்துவதில் பயன் எதுவும் இல்லை எனவும் தெரிவித்தது.

தற்போது வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்துத் தென் பகுதி மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையான கருத்தரங்கு ஒன்றை இன்று கொழும்பு பொது நூல் நிலையத்தில் நடத்துவதற்கும் இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளை மறுதினத்துக்கு முன்பாக இது குறித்து சாதகமான பதில் கிடைக்காது விட்டால், தொடர்ந்து சில தினங்களுக்கு ஹர்த்தால போராட்டத்தை நடத்த இந்த அமைப்பு ஆயததமாக உள்ளதாக பொலிஸ் உளவுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து சட்டம் மற்றும் சமாதானத்துக்கான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ கருத்துத் தெரிவிக்கையில் -

எப்படியாயினும், விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற்படை வீரர் இருவரையும் விடுவிப்பதற்குப் பதிலாக புலிகள் கேட்டுள்ள 10 பேரையும் விடுதலை செய்யமுடியாது எனவும் தெரிவித்தார். (தே)

### போர்த்தளபாட கொள்வனவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கடற்படை மற்றும் விமானப்படையினருக்கு போர்க்கப்பல் மற்றும் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடற்படையினருக்கு பாரிய போர்க கப்பலொன்றையும், நீண்ட நீண்ட தூர வீச்சுத்திறன் கொண்ட பீரங்கிகளையும் கொள்வனவு செய்யவும் விமானப்படையினருக்கு மூன்று போர் விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# தாதியர் பயிற்சிக்கு 600 பேர் தெரிவு

வடக்கு - கிழக்கு பிரதேசத்திலிருந்து சுகாதார அமைச்சு முதன்முறையாக 600 குடும்பநல மருத்துவ மாதுகளை முதற்கட்டப் பயிற்சிக்குத் தெரிவுசெய்துள்ளது. இந்தப் பயிற்சிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா பொது மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகொட் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 600 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளிலுள்ள தாதிமார் பயிற்சி நிலையங்களுக்கு தலா 125 பேர் அனுப்பப்படவுள்ளனர். இந்தப் பயிற்சிக் காலம் ஒன்றரை வருடங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. எஞ்சிய 350 பேருக்கும் மூன்றுமாதகாலப் பயிற்சிகள் வவுனியாவில் வழங்கப்படும். இதன்பின்னர் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

### புதுடெல்கி 'பாதி' மரதன் ஓட்டத்தில்

# கென்ய வீரர், சீன வீராங்கனை சம்பியன் பட்டத்தை வென்றனர்!



புதுடெல்கியில் நடைபெற்ற பாதி மரதன் போட்டியில் கென்ய வீரர் போல் கிரியு சம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றார். பெண்கள் பிரிவில் சீனாவின் இங்ஜிசென் முதலிடம் பெற்றார். ஆண்களுக்கான குழுப் போட்டியிலும் கென்யாவுக்கே முதலிடம் கிடைத்தது.

சுமார் 21 கி.மீ கொண்ட இந்த ஓட்டத்தில் கென்யாவின் 24 வயதான போல் கிரியு ஒரு மணி நேரம் 2 நிமிடம், 15 வினாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தன்சானியாவின் ஜோசப் பாபியானோ இரண்டாவது இடத்தையே பெறறார்.



ஆண்களுக்கான குழுப் போட்டியில் கென்யா முதலிடத்தைப் பெற்றது. எதியோப்பியா, உகண்டா குழுக்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றன.

பெண்கள் பிரிவில் சீனாவின் 27 வயதான இங்ஜிசென் தங்கத்தைத் தட்டிச்சென்றார். இவர் போட்டித் தூரத்தை ஒரு மணி நேரம், 8 நிமிடம், 40 வினாடிகளில் கடந்தார்.

இவருக்குக் கடும் போட்டியைக் கொடுப்பார் என்று கணிக்கப்பட்ட அயர்லாந்தின் சோனியா ஓ சலிவன் நான்காவது இடத்தையே பெற்றார்.

குழுப் போட்டியில் எதியோப்பியா முதலிடம் பெற்றது. ருமேனிய, ரஷ்யக் குழுக்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றன.

முதலிடம் பெற்ற போல் கிரியு, இங்ஜிசென் தலா 14 லட்சம் ரூபா பரிசுத்தொகையாகப் பெற்றனர். குழுப் போட்டிகளில் முதலிடம் பிடித்த கென்யா, எதியோப்பிய அணிகள் தலா 4 லட்சம் ரூபாவை பரிசாகத் தட்டிச்சென்றன.

பாதி மரதனைத் தொடர்ந்து 'டில்லி மெகா ஓட்டம்' நடந்தது. இதில் பள்ளிக் குழந்தைகள், விளையாட்டுப் பிரபலங்கள், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் என சுமார் 50 ஆயிரம் பேர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

நேற்றைய ஓட்டத்தில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்கள் வருமாறு -

1. போல் கிரியு (கென்யா) 1:02:15, 2. பாபியானோ ஜோசப் (தன்சானியா) 1:02:31, 3. அகமது அப்துல்லா



அகமது ஹசன் (கட்டார்) 1:02:36, ஜோன் செரியுட் கொரிர் (கென்யா) 1:02:38, 5. சாலமன் சிகே (எதியோப்பியா) 1:02:42

**குழு**

1. கென்யா (3:07:55), 2. எதியோப்பியா (3:08:37) 3. உகண்டா (3:13:48)

**பெண்கள்**

1. இங்ஜிசென் (சீனா) 1:08:40, 2. லிடியா செரோமி (கென்யா) 1:09:00, 3. கான்ஸ்டான்டினா டொமஸ் குடிட்டா (ருமேனியா) 1:09:07, 4. சோனியா ஓ சலிவன் (அயர்லாந்து) 1:10:33, 5. யுகி சைடோ (ஜப்பான்) 1:15:05.

**குழு**

1. எதியோப்பியா (3:36:00), 2. ருமேனியா (3:36:08), 3. ரஷ்யா (3:38:28).

# பிரேசில் மரதன் வீரருக்கு ஒலிம்பிக் தங்கம் வழங்குங்கள்

## நீதிமன்றில் முறைப்பாடு

(ரியோ டி ஜெனீரோ)



பிரேசில் மரதன் ஓட்டவீரர் வன்டரெலி டீலீமாவிற்கு ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வழங்கப்பட வேண்டுமென விளையாட்டுக்கான நல்லிணக்க நீதிமன்றத்தில் பிரேசில் ஒலிம்பிக் கழகம் விண்ணப்பம் செய்துள்ளது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் மரதன் ஓட்டப்போட்டியில் முன்னணியில் வந்து கொண்டிருந்த லீமா ஒரு பார்வையாளரால் தடங்கலுக்குட்படுத்தப்பட்டார். இதனால் இவர் வெள்ளிப் பதக்கத்தையே பெறமுடிந்தது.

இது குறித்து பிரேசில் ஒலிம்பிக் சபைத் தலைவர் கருத்துக் கூறும் போது - மேன்முறையீடு செய்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த முடிவு பிரேசில் விளையாட்டுத்துறையினதும், லீமாவினதும் நன்மை சார்ந்ததாகும்.

இத்தாலியின் ஸ்ரெபானே பல்டினி பெற்ற தங்கப்பதக்கத்தை இழக்கச் செய்வது எமது நோக்கமல்ல. அவரது தங்கப்பதக்கத்தை அவரிடமே இருக்கக்கூடியதாக லீமாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக சர்வதேச ஒலிம்பிக் குழுவானது ஏதென்சில் வைத்து ஒலிம்பிக் விழுமியங்கள் மற்றும் நியாயபூர்வமான வீரருக்குரியது என்ற விசேட விருதொன்றை லீமாவுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொரியன் ஓபன் ரெனிஸ் ஷரபோவா சம்பியன்!

(சியோல்)



கொரியன் ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியில், ரஷ்யாவின் மரியா ஷரபோவா சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இறுதிப் போட்டியில் ஷரபோவா 6-1,6-1 என்ற அடிப்படையில் மார்ரா டொமசோவ்ஸ்காவை தோற்கடித்தார்.

17 வயதான ஷரபோவா அண்மையில் நடந்த விம்பிள்டன் போட்டியில் சம்பியனாகத் தெரிவானார். ஒரு லட்சத்து 40 ஆயிரம் டொலர் பரிசை ஷரபோவா - ஒரு மணிநேர இறுதிப் போட்டி வெற்றியின்பின் தட்டிக்கொண்டார்.

இவர் 18 வயதான டொமசோவ்ஸ்காவுடன் இறுதிப் போட்டியில் மோதியிருந்தார்.

# இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பான வெற்றியைப் பெறுவோம்

## அவுஸ்ரேலிய அணித்தலைவர் கில்கிறிஸ்ட்



இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சிறப்பான வெற்றியைப் பெறவே நாங்கள் விரும்புகிறோம். இந்திய அணியில் டெண்டுல்கர் ஆடுவதையே தாம் விரும்புவதாகவும் அவுஸ்ரேலிய அணியின் கப்டன் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

பெங்களூரில் நிருபர்களைச் சந்தித்த போது அவர் கூறியதாவது -

முதலாவது டெஸ்டில் டெண்டுல்கர் பங்கேற்க வேண்டும். அவரது ஆட்டத்தைப் பார்க்க அனைவரும் ஆவலாக உள்ளனர். நான் பார்க்ககிலேயே உலகக்கின் சிறங்க துடுப்பாட்டவீரர் அவர்தான். இந்தியாவில் வெற்றி பெற்றால், டெண்டுல்கர் பங்கேற்ற அணிக்கு எதிராக வெற்றிபெறுவதே சிறப்பாகும்.

எங்கள் துடுப்பாட்டவீரர்கள் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக ஆடுவதில் சிறந்தவர்கள். இதனால் டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்களின் சுழற்பந்து வீச்சை சந்திக்கத் தயாராக இருக்கிறோம். கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோரது சவால்களை சந்திக்க தயாராகிவிட்டோம்.

மும்பை அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் வீரர்களின் திறமை மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. மக்ரா, பிரட் லீ ஆகியோர் சிறப்பாக பந்துவீசினர். இளம் வீரரான கிளார்க் நன்றாக ஆடுகிறார்.

இதுவரை கிளார்க் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. ரிக்கி பொண்டிங் இடத்தை அவர் சரி செய்வார். அவுஸ்ரேலியா தற்போது துடுப்பாட்டம், பந்துவீச்சு ஆகியவற்றில் சமநிலை பெற்று இருக்கிறது.

இந்தத் தொடர் பரபரப்பான திருப்பங்களைக் கொண்டிருக்கும். அவுஸ்ரேலிய அணி வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோர். சிறப்பாக பந்து வீசுகிறார்கள் என அவர் மேலும் கூறினார்.

# அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடர் இந்தியாவுக்கு வெற்றி வாய்ப்பு!

## இங்கிலாந்தின் முன்னாள் கப்டன் கணிப்பு

(லண்டன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் இந்திய அணிக்கு வெற்றி பெறும் வாய்ப்புள்ளது என்று, இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனான மைக்கல் அதர்டன் கணித்துள்ளார்.

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையே 4 டெஸ்ட்கள் கொண்ட தொடர் இம்மாதம் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இந்திய அணிக்கு வெற்றிபெறும் வாய்ப்பு இருக்கிறது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனான மைக் அதர்டன் தெரிவித்துள்ளார்.

சமீப காலங்களில் ஆசிய துணைக்கண்டத்தில் அவுஸ்ரேலிய அணி சிறப்பாக ஆடிய போதிலும், இந்தியாவிற்கு எதிரான தொடரின் போது இந்திய சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்து விடுவார்கள்.

ஆசிய துணைக்கண்டத்தில் அவுஸ்ரேலிய அணி அடிக்கடி சுற்றுப்பயணம் மேற்கொண்டு போட்டிகளில் பங்கேற்று வருகிறது.

சமீபத்தில் இலங்கையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் தொடரையும் வெனறுள்ளது.

மேலும், நெருக்கடியான கால கட்டங்களில் வலுவான துடுப்பாட்ட வரிசை அமைப்பைக் கொண டுள்ள இந்திய அணி தடுமாறி விக்கெட்டுக்களை பறிகொடுத்து வருகிறது. அவுஸ்ரேலிய அணியால் சுழற்பந்து வீச்சிற்கு எதிராகச் சிறப்பாக ஆடமுடியாது.

இந்தியாவில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெறுவது மிகவும் சிரமமான ஒன்று. இந்தத் தொடரில் இந்திய அணிக்கு வெற்றிபெறும் வாய்ப்பு இருக்கிறது.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணம் என்று அழைக்கப்படும் சம்பியன் கிண்ணத்துக்கான போட்டியில் கலந்துகொண்ட இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் தங்களது திறமைக்கேற்ப முழுத்திறமையை வெளிப்படுத்த முடியவில்லை.

இரு அணிகளுக்கு இடையே நடக்கவிருக்கும் முதலாவது டெஸ்டில் முன்னணி வீரர்களான சச்சின் டெண்டுல்கர் மற்றும் ரிக்கி பொண்டிங் ஆகியோர் பங்கேற்க வாய்ப்பில்லை. இதனால் இந்தத் தொடரில் அதிகளவில் பாதிப்பு ஏற்படாது.

மேலும் மேற்படி காரணங்களால் சிறிது பாதிப்பு ஏற்பட்டாலும், டெஸ்ட் தொடரை கட்டாயமாக நடத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இதனை ஈடுகட்ட இரு அணிகளுக்கும் இடையே கூடுதலாக ஒரு போட்டியை நடத்துவதற்குப் பதிலாக, ஒருநாள் தொடரை நடத்தினால் இரு அணிகளும் சிறப்பாக ஆடும். ரசிகர்களுக்கும் கூடுதலான போட்டிகளைக் கண்டுகளிக்க வாய்ப்புக்கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 12 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் போட்டிகளின் விபரம் -

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் - மகாஜனா கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணியும் -

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் -

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் - யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும் -

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது. (58)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் 14,16,18, 20 வயது ஆகிய. நான்கு பிரிவுகளில் நடைபெறவுள்ளன. (72)

# தெல்லிப்பளை கோட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கல்விக்கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த முதலாம் திகதி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை அருணோதயாக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யூனியன் கல்லூரியும், 3 ஆம் இடத்தை மல்லாகம் மகா வித்தியாலயமும் பெற்றன.

16 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை அருணோதயாக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யூனியன் கல்லூரியும், 3 ஆம் இடத்தை வசாவிளான் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை அருணோதயாக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யூனியன் கல்லூரியும், 3 ஆம் இடத்தை மகாஜனாக் கல்லூரியும் பெற்று வலய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகின.

(72)

# சமூகத்தில் மாற்றம் தேவையென்றால் முதலில் பெண்களிடம் மாற்றம் வேண்டும்

## பெண்கள் சங்கமம் நிகழ்வில் தமிழினி




எமது தேசியத் தலைவரின் காலத்தில் பெண்கள் அனைத்து துறைகளிலும் தம்மை வளர்த்து மட்டுமன்றி, தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காக தமது உயிர்களையும் அர்ப்பணித்து இருக்கிறார்கள் என - தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த மண்ணில் பெண்கள் பிறக்கும் பொழுதே இரக்கத்துக்குரிய பிறவிகளாக பழிக்கப்படுகிறார்கள். இதுதான் இன்று எமது சமூகத்தில் இருக்கும் யதார்த்த உணர்வு. இந்த உணர்வு வெளிப்பட்டதுக்குப் பின்னால், ஓர் பெரிய செய்தி இருக்கிறது. பெண் பிரச்சினைக்கு உரியவளாக இருக்கிறாள். இன்னொருவரில் தங்கி வாழ்பவளாக, தனித்து வாழ முடியாதவளாக இருக்கிறாள். இந்த சமூகத் தில் ஓர் சுமையாக இருக்கின்றாள். ஆகவே, பெண் பிறக்கும்பொழுதே பிரச்சினைக்குரியவளாக இருக்கிறாள்.

ஓர் பெண் சிறுவயதிலிருந்து வளர்த்தெடுக்கப்படும்போது, ஓர் சிறிய வட்டத்துக்குள், இயல்பு வாழ்க்கைக்கு ஏற்றவாறு தான் வளர்த்தெடுக்கப்படுகிறாள். அவளுக்கு வாங்கிக் கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள் கூட - காப்புகள், சட்டி, பானை போன்றவையே. ஆனால், ஓர் ஆண்பிள்ளைக்கு வாங்கி கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள் அறிவியல் ரீதியானவையாக இருக்கும். இந்தச் செயற்பாடானது - ஆண்கள் ஓர் அறிவியல் ரீதியாக வளர்க்கப்படுகிறார்கள், பெண்கள் ஓர் சிறிய வட்டத்துக்குள் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்றவாறு வளர்க்கப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இதனால் பெண்ணானவள் வெளியில் சென்று கதைக்கும் பொழுது சட்டி, பானை, காப்பு போன்றவை பற்றியே கதைப்பாள். ஆனால் ஆண் அறிவியல் ரீதியாக ஆக்கபூர்வமானதாக கதைப்பான்.

பெண்ணானவள் எந்தவொரு விடயத்திலும், இலக்கு இருக்க வேண்டும், இலட்சியத்தை அடைய வேண்டும், தனக்கு தேவையானவற்றைப் போராடிப் பெறவேண்டும் என்ற நோக்குடன் வளர்க்கப்படாமல், உளவியல் ரீதியாலும், உடலியல் ரீதியாகவும், ஆற்றாமை இல்லாதவளாக, கண்ணீர் விடுபவளாக, பலவீனப்பட்டவளாக, வளர்க்கப்படுகிறாள்.

பெண்களுக்கு நிறையத் தடைகள் இருக்கின்றன. சத்தமாகச் சிரிக்க, கதைக்கக் கூடாது, நிமிர்ந்து நடக்கக்கூடாது என்று எமது மனித உடலுக்கு இருக்கிற அனைத்து ஆற்றல்களையும் அடக்கி, ஒடுக்கி ஒரு நோயாளர்களைப்போல் வளர்க்கிறார்கள்.

இதுதான் இன்று எமது சமுகத்தின் யதார்த்த நிலை. மிருகக்காட்சி சாலையில் நிற்கும் யானைகள் - சிறியதாக இருக்கும் காலம்முதல் பெரிய சங்கிலியால் கட்டி, அடக்கி, ஒடுக்கி வளர்க்கப்படும். அப்போது அந்தச் சங்கிலியை அறுத்துக்கொண்டு போவதற்கு எத்தனித்து தோற்றுப் போய்விட்ட நிலையில், பெரிதாக வளர்ந்தபின் சிறிய சங்கிலியால் கட்டப்பட்டாலும், அது அதனை அறுத்துக்கொண்டுபோக எத்தனிப்பதில்லை. இதுபோலத்தான் எமது சமுகத்திலும் பெண்களுக்கு தமது ஆத்மபலம், தமது அறிவியல் ரீதியான வளர்ச்சி, தம்மால் முடியும் என்பது தெரியாது. ஏனென்றால் இதுதான், இப்படித்தான், இவ்வாறுதான் என்று பழக்கப்பட்டவர்களாக அவர்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. வார்த்து எடுக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படிப்பட்ட ஓர் சமூகத்தில் இருந்துதான் 2ம் லெப்டினன்ட் மாலதி வெளியே வந்தாள். சாதாரணமாக ஒரு பெண் - வீட்டிலிருந்து வெளியில் செல்லவதே ஓர் பிரச்சினையாக இருக்கிறது. இப்படியான ஓர் சமூகத்தில் இருந்து வெளியே வந்த 2ம் லெப்டினன்ட் மாலதி - தையெல்லாம் செய்யமுடியாது என்று எமது சமூகம் சொன்னதோ, அதையெல்லாம் செய்துதான் தன்னளவில் ஓர் சுதந்திரமான பெண்ணாக வளர்ச்சி அடைந்தது மட்டுமன்றி, ஒட்டுமொத்தமான தமிழீழ தேசத்துக்கும், அந்த தேசத்திலுடைய விடுதலைக்கும் தனது உயிரை அர்ப்பணித்து ஓர் வரலாற்றைப் படைத்திருக்கிறாள்.

ஆகவே, இந்த தமிழீழ பெண்களுக்கான ஓர் எழுச்சியின் வடிவமாகத்தான் 2ம் லெப்டினன்ட் மாலதியைப் பார்க்கிறோம். இதனால்தான், இவரது நினைவு நாளை தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக பிரகடனம் செய்திருக்கிறோம். ஏற்கனவே எமது சமுகத்தில் பெண்ணுக்கு கொடுக்கப்பட்ட விம்பம் உடைக்கப்பட்டு இருக்கின்றது.

முதன்முதலில் பெண்கள் கடலில் - பயிற்சியில் ஈடுபடுகின்றபோது, சிலர் அதனை வியப்பாகப் பார்த்தார்கள். எமது தேசியத் தலைவரின் காலத்தில் பெண்கள் தரையில் மட்டுமல்ல, கடலிலும் சாதனைபுரியக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. தற்காலத்தில் புதிய விம்பத்துடன் தமிழீழப் பெண் எழுந்து நிற்கிறாள். இதனை எல்லா மனங்களும் ஏற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்.

உலகத்தில் அவர்களின் சமூக, கலாசாரத்துக்கு ஏற்ப பெண்களை பற்றி எழுதுகிறார்கள், கதைக்கிறார்கள். பெண்கள் அறிவியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சமூகத்தில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்றால், முதலில் பெண்கள் மத்தியில் மாற்றம் ஏற்படவேண்டும். எமது பெண்கள் மத்தியில், தற்போதும் அவர்களின் மன உணர்வுகளில் விலங்குகள் இடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆசிரியர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் - நாளை காலை 9.30 மணிக்கு கலலூரி விவேகானந்தர் மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் நடேசவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முன்னாள் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சுடர் இ.மகேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் - கவிதை, பட்டிமன்றம், ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

(91)

### மாலைநேர வகுப்புகள்

(ஆழியவளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச மாணவர்களின் நன்மைகருதி புலோப்பளை புனித இராயப்பு தேவாலய பங்குச் சபையால் - இலவச மாலை நேர வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தேவாலய பங்குத்தந்தை அருட்திரு வசந்தசீலன் அடிகளாரின் வழிகாட்டலில் புலோப்பளை றோ.க. த.க பாடசாலையில் கடந்த வாரம் முதல் இந்த வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

பெருமளவு மாணவர்கள் இந்த வகுப்புக்களில் பங்கு கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

(122)

# தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

திறன் அபிவிருத்தி. தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, சம்மாந்துறை, திருகோணமலை உள்ளிட்ட இலங்கையிலுள்ள முப்பத்தியாறு தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் எதிர்வரும் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முழுநேர, பகுதிநேர, மாலைநேர கற்கைநெறிகளாக நடைபெறவுள்ள பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்களை, உரிய தொழில்நுட்பக் கல்லூரிகளில் பெற்று, பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய தொழில் நுட்பக் கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

முழுநேரக் கற்கைநெறி ஒன்றைத் தொடரும் மாணவர்களுக்கு, அவர்களது குடும்ப பொருளாதார நிலைமைக்கு ஏற்ப - அவர்கள் சமூகம் தரும் தினம் ஒன்றுக்கு 20 ரூபா படி - மாதம் ஒன்றுக்கு நானூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத உதவித்தொகை வழங்கப்படும் எனவும், முழுநேர கற்கைநெறி ஒன்றைத் தொடரும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுள் அறுநூறு பேருக்கு வருடம் ஒன்றுக்கு 2500 ரூபா வீதம் உதவுதொகை வழங்கப் படவுள்ளதாகவும், திறன் விருத்தி, தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பகுதிநேர அல்லது மாலைநேர கற்கைநெறி ஒன்றைத் தொடர விரும்புபவர்கள் - ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பயிற்சி நெறியாயின் இரண்டாயிரம் ரூபாவும், ஒரு வருடத்துக்கு உட்பட்ட பயிற்சிநெறியாயின் ஆயிரத்து ஐநூறு ரூபாவும் செலுத்துதல் வேண்டும்.

யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரியில் இருபதுக்கும் மேற்பட்ட பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

(31)

# மின்சாரம் மூலம் உடலை தகனம் செய்யும் இயந்திரத்தைப் பொருத்துவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம் நகர சபைக்குட்பட்ட இந்து மயானங்களில் மின்சாரத்தால் சடலங்களைத் தகனம் செய்யும் இயந்திரம் பொருத்துவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையினர் முயற் சிகளை எடுத்துள்ளனர்.

இதற்காக யாழ். அரச அதிபரிடம் தேவையான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்கு விறகைப் பயன்படுத்துவதால் மக்கள் அதிகளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. அத்துடன், சூழல் மாசடைவதையும் கருத்திற்கொண்டு தாங்கள் இந்த திட்டத்தை வகுத்துள்ளதாகவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

குறிப்பாக கோம்பயன் மணல் மயானத்தை தெரிவு செய்துள்ளதாகவும், இவ்வாறு மின்சார உடல் தகன வசதிகள் நிறுவும் பட்சத்தில் இறந்தவர்களின் உடல்களை எரியூட்டுவதற்கு இன்றைய காலகட்டத்தில் விறகைப் பெறுவதைவிட குறைவான செலவுதான் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (90)

### அவசர கூட்டம்

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - தையல் போதனாசிரியர்களுக்கான கூட்டம் மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்கள் தங்களால் சமர்ப்பிக்கப்படவேண்டிய மாதாந்த அறிக்கைகளைக் கொண்டு வருமாறும், குழுப் புகைப்படம் எடுப்பதற்குத் தயாராக வருமாறும் மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.செல்வரத்தினம் தெரிவித்தார்.



யாழ். மறை மாவட்ட மறைக் கல்விப் பணியகத்தால் நடத்தப்பட்ட மறைக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி முடிவில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்குவதைக் காணலாம்.

(21)

### மட்டுவில் வீதி திருத்தப்படவில்லை

மிகநீண்ட காலமாகத் திருத்தப்படாது, குன்றும் குழியுமாகக் காணப்படும் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் வீதி முதல் கைதடி நுணாவில் வைரவர் கோவில் வரை செல்லும் வீதியில் அம்மன் கோவில் பக்கமாகவுள்ள 2 கிலோமீற்றர் நீளமான வீதியை, செப்பனிட்டுத் தருமாறு மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் - வீதி அபி விருத்தி அதிகார சபையைக் கடித மூலம் கேட்டுள்ளது.

இந்த வீதியின் ஏனைய பகுதி பல தடவைகள் திருத்தப்பட்ட போதும், இந்தப் பகுதி மட்டும் திருத்தப்படாமை பற்றி இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

(24)

# பதவியுயர்வுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அரச பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப்பதியுநர் சேவை, பண்டகசாலைக் காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகிய பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கான பதவியுயர்வுப் பரீட்சைகள் 2003, 2004 ஆம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்கள் - பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு முதற்கட்டமாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக்கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை எனவும் -

இரண்டாவது தடவை தோற்றுபவர்கள் பரீட்சைக்கட்டணமாக ரூபா நூறு தபால் அலுவலங்களில் செலுத்தி, பெறப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்து தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அடுத்த மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

இந்த விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் இந்த மாதம் 1 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தகமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும்.

(31)

### கடற்தொழிலாளர் சங்க கூட்டம்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் பிரதம விருந்தி னராகவும், வலி.மேற்கு கடற்புலிகளின் அரசியறதுறைப் பொறுப்பாளர் மணாளன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(21)

### மகாபொல கொடுப்பனவை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ‘மகாபொல’ பெறும் மாணவர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக நிறுவன இயக்குநர் இராஜரட்ணம் தெரிவித்தார்.

எனவே, இந்த மகாபொலக் கொடுப்பனவைப் பெறும் தகுதியுள்ள மாணவர்கள் - எதிர்வரும் இரு வாரங்களுக்குள் தமது கொடுப்பனவுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என நிறுவன இயக்குநர் மேலும் தெரிவித்தார்.




# அழிவுறும் இயற்கை அழகு



உலகின் சில கடற்கரைகளில் மட்டும்தான் அழகானதும், பெறுமதி வாய்ந்ததுமாகிய பவளப்பாறைகள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை கரிபியன் கடலில் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பாறைகளைப் பார்ப்பதற்காக - அதாவது இந்தக் கடலில் சுழியோடுவதற்காக வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணிகள் வருகின்றார்கள். இதன்மூலம் 2000 ஆம் ஆண்டில் மட்டும் 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்ததாகக் கணக்கெடுப்புக்கள் கூறுகின்றன. ஆனால் மீன்கள் மூலம் கிடைத்த வருமானம் 2000 ஆம் ஆண்டில் 3.1 பில்லியனுக்கும் 4.6 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குமிடையேதான் இருந்தது. ஆனால் உல்லாசப் பிரயாண வருமானம் கணிசமானளவு இருந்ததாகக் கூறப்படுகின்றது. இப்போது இந்த உல்லாசப் பயணிகளால் பவளப் பாறைகளுக்கு ஆபத்து வந்திருக்கின்றது. பவளப் பாறைகளால் கவரப்பட்ட உல்லாசப் பயணிகள்- அதில் காணப்படுகின்ற தாவரங்கள் மற்றும் முத்துக்களை உடைத்து வெளியே எடுத்துக்கொண்டு வருவதற்கு முயற்சி செய்கிறார்கள். இதன்மூலம் அவற்றின் அழகு மற்றும் இயற்கைத் தன்மை ஆகியன பாதிப்புறுகின்றன. சிலவேளைகளில் ஆழ்கடல் மீன்பிடியாலும் இந்தப பாறைகள் பாதிப்புறுகின்றன.



# சந்தைக்கு வரும் ஐதரசன் எரிபொருள்



பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பு முழு உலகத்தையும் கதிகலங்க வைத்துள்ளது. ஏறக்குறைய சரிபாதி அளவுக்குப் பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் பெற்றோலியப் பொருட்களை விட்டு, வேறு வகையான எரிபொருட்களை ஏன் பாவிக்கக்கூடாது என மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இதற்கான விடையாக ஐதரசன் மூலம் சில கார்களை இயங்கவைக்க முடியும் என்ற ஆய்வில் பெரிதாக வெற்றி கிடைக்காவிட்டாலும்கூட, அதிகரித்துவரும் பெற்றோலியப் பொருட்களின் விலையைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு இது இருக்கும் என்ற கருத்து இருக்கிறது.

இதேவேளை - ஏறக்குறைய 2030 ஆம் ஆண்டளவில் ஐதரசன் எரிபொருட்களின் பாவனை முற்றுமுழுதாகச் சந்தையில் இருக்கும் எனப் பாவனையாளர்கள் கருதுகிறார்கள். முதன் முதலில் 1990 ஆம் ஆண்டில் இவை பாவிக்கப்பட்டாலும், வெற்றி பெரிதளவில் கிடைக்கவில்லை. மக்கள் பெற்றோலியப் பொருட்களின் எரிபற்று நிலையைக் கருத்திற்கொண்டு ஐதரசன் எரிபொருளைக் கவனிக்கத் தவறிவிட்டார்கள். ஆனாலும், இப்பொழுதும் ஐதரசன் எரிபொருளில் காணப்படுகின்ற விலை வீழ்ச்சிதான் பெற்றோலியப் பொருட்களை மறக்கவைத்திருக்கிறது.

# கார்கள் பலவிதம்



கார்களை இறக்குமதி செய்வதிலும் பார்க்க அவற்றைச் சொந்த நாட்டிலேயே தயார் செய்கின்ற முயற்சி பல நாடுகளில் வெற்றியளித்து வருகின்றது. இப்போது சிறிய கார்களிலேயே மக்கள் அதிக மோகம் கொண்டிருக்கின்றார்கள். பிரான்ஸ் நாட்டிலே காணப்படுகின்ற பெரிய படகுக்கார்கள் - மக்கள் மத்தியில் ஒருவித எரிச்சலை ஏற்படுத்தியிருக்கின்றது.

அண்மையில் நடைபெற்ற கார்க் கண்காட்சியில் இருந்த பெரும்பாலான கார்கள் புதிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்பட்டன. தற்போது சுவிற்சர்லாந்தும் ஜப்பான் நாட்டுத் தயாரிப்புக்கு நிகரான பல கார்களைத் தயாரிக்கக் கூடியவாறு தன்னைத் தொழில்நுட்பத் திறமைகள் மூலம் தயார்படுத்தியிருக்கின்றது.

அந்தப் பொருட்காட்சியில் காணப்பட்ட பி.எம்.டபிள்யூ. எம்.5 வகைக் கார் எல்லோரையும் கவரக்கூடியவாறு இருந்தது. இதிலே காணப்படுவது மிக உன்னதமான இயந்திரம் என கார் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

ஆனாலும், வி-10 இயந்திரம்போல் இது அல்ல என்ற கருத்தும் இருக்கிறது. எவ்-430, பெராரி-360 மொடேனா ஆகிய கார்கள்கூட மிகவும் புதிய வடிவில் வந்த கார்களாக உள்ளன. ஜேர்மனியத் தயாரிப்பான பொக்ஸ் வகன் கார் மிகவும் சிறியதாகவும், எல்லோரையும் கவரக்கூடியதாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதே வேளை - முன்னணி ஜப்பான் நாட்டுத் தயாரிப்பாகிய டொயோட்டா லெக்ஸஸ் வகைக்கார் குறைந்த எரிபொருளில் கூடியதூரம் ஓடக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

# செவ்வாயில் சில படிவுகள்





செவ்வாய்க் கிரகத்தில் காணப்படுகின்ற புவியியல் காரணிகள் நீர்ப்படையையும், அத்துடன் மெதேன்வாயுப்படையையும் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி - மெதேன்படை சில இடங்களிலும், பனிகட்டிகள் சில இடங்களிலும் செறிந்து காணப்படுகிறன. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கொண்டு சென்ற நவீன கருவிகள் இந்த அம்சங்களைக் கண்டறிய வைத்திருக்கின்றன. விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்பில் வந்த ஸ்பெக்ரா என்ற கருவி, புவியியல் அம்சங்களை கண்டறிவதில் வல்லதாக இருக்கின்றது. ஆனாலும், சில இடங்களில் நீராவி மெதேன் ஆவி ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. செவ்வாயின் மேற்பரப்பிலிருந்து 10-15 கிலோமீற்றர் வரையான பிரதேசம் இப்படியான மாற்றங்களுக்கு உள்ளாவதாக அறியப்பட்டுள்ளது. தற்போது இவ்விரண்டையும் பிரித்து ஆராய்வதில், எல்லா நாடுகளிலுமுள்ள விண்வெளி ஆய்வு நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டுள்ளன. அவற்றில் பீகிள்-2 என்ற ஐரோப்பியாவை சேர்ந்த செய்மதி செவ்வாய்க்கிரகத்தில் காணப்படுகின்ற நீர் மற்றும் மெதேன் படிவுகளை ஆய்வு செய்வதில் முன்நிற்கின்றது.



# சந்திரனில் புதிய அம்சம்

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின், பிரதம விஞ்ஞானியுடைய கருத்துப்படி சந்திரனில் ஒரு பிறை வடிவம் (என் ஓ ஏ எச்) காணப்படுவதாகக் கூறப்படுகிறது. புவியிலிருந்து சந்திரனைப் பார்க்கும் போது, இது அவ்வளவாக தெரியாவிட்டாலும், வேற்றுக் கிரகங்களிலிருந்து பார்க்கும்பொழுது நன்கு தெரிகிறதென விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஸ்மாட் - 1 என்ற விண்கலம் முற்றுமுழுதாக சந்திரன் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. எதிர்வரும் நவம்பர் மாதம் தன்னுடைய வெற்றிகரமான செயற்பாட்டை முடித்துக்கொண்டு, பூமிக்கு திரும்பிவிடும் எனவும் அதன் பிறகுதான் மனிதர்கள் சந்திரனில் வாழலாமா? அல்லது வாழமுடியாதா? என்ற கேள்விக்கான பதில் கிடைக்கும் என விஞ்ஞானிகள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஸ்மாட்-1 விண்கலம் அனுப்பிய சில தகவல்களின்படி, மனிதர்கள் வாழக்கூடிய நிலைமைகள் ஓரளவுக்கு சந்திரனில் இருக்கிறது என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. சந்திரனின் தரைத்தோற்ற அம்சங்களில் பெறப்பட்ட சில மாதிரிகள், புவியிலுள்ள சில தரைத்தோற்ற அம்சங்களுக்கு ஒதுத்துப்போகின்றதாகவுள்ளது. தற்போது ஆராய்ச்சிகள் முடியும் நிலையில் (என் ஒ ஏ எச்) பிறைவடிவம் புதிய தலையிடியைக் கொடுத்திருக்கிறது.





# திமிங்கலங்களின் அழிவு

கடலிலே காணப்படுகின்ற முலையூட்டி விலங்குகள் சடுதியாக இறக்கத்தொடங்கியிருக்கின்றன. இதற்கான முழு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஐரோப்பிய ஆய்வுக்குழுவின் கருத்துப்படி, அதிகம் இறந்திருப்பது கடல் திமிங்கலமே யாகும். அத்துடன், கடல் சுறாக்களும் டொல் பின்க ளும் கூட அழிந்திருக்கின்றன. இதற்குக் காரணமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர் களை மட்டும் கூறமுடியாது. சில பெரிய தொழிலதிபர்கள் இந்த விலங்குகளை பிடிப் பதன் நோக்கம் - அவற்றிலேயே காணப்படு கின்ற எண்ணைக்காகவாகும் என்று திமிங் கலம் மற்றும் டொல்பின்கள் ஆய்வுக்குழு ஐரோப்பாவில் வைத்து கூறியுள்ளது. தொடர்ச்சியாக அழிக்கப்படுகின்ற இந்தப் பாரிய கடல் முலையூட்டிகளின் வேட்டை தற்போது தாய் விலங்குகள் மற்றும் குட்டி கள் அழிப்பு என்று தொடர்ந்தவண்ணமே உள்ளது. சிலவேளைகளில் பாரிய கப்பல் கள் கடலில் பிரயாணம் செய்யும்போது அவற்றின் சோனார் திரையை இவை குழப்புவதாக அமைந்தால், அங்கு வைத்து திமிங்கலங்கள சுட்டுக்கொல்லப்படுகின்றன. இதுவும் இவைகளின் அழிப்புக்கு ஒரு காரணமாக அமைகிறது. சர்வதேசம் முழுவதும் கடல்வாழ் முலையூட்டிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டேவருவதாக ஆய்வாளர்கள் கூறினாலும், சில இடங்களில் இவற்றின் எண்ணிக்கை பெருமளவாகவுள்ளது.





## திரை விமர்சனம்

# செல்லமே

படத்தின் கதையை நம்பி தியேட்டருக்குப் போகும் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தைத்தரும் படம் இது.

தொழிலதிபர் கிரிஷ்கர்னட்டின் மகன பரத். இவர் ஆறுமாதக் குழந்தையாக இருக்கும் பொழுது, ரீமாசென்னுக்கு வயது ஆறு. பரத்தை ரீமா ஒரு தாயைப்போலப் பார்க்கிறாள்.

இந்த உறவு பரத் வாலிபனானதும் இன்னும் இறுக்கமாகிறது.



இதற்கிடையில் விஷால் ரீமாவின் மீது காதல் கொள்கிறார். மோதலுக்குப் பின் காதல். பின் மோதல் அத்துடன், அவர்களின் உறவு கல்யாணம் வரை செல்கிறது.

கல்யாணம் செய்து கொண்டு ரீமா செல்வதை பரத் விரும்பவில்லை. ரீமாவை பரத் கடத்துகிறார். அத்துடன் கிளைமாக்ஸ் ஆரம்பமாகிறது. இதைப்போல பல படங்கள் வந்துவிட்டன. குறிப்பாகச் சொல்லப்போனால் "குணா" நாயகனாக வந்திருக்கின்ற நாடக நடிகர் விஷால் நன்றாக நடித்திருக்கிறார்.

பரத் குட்டிரகுவரன் பட்டம் கொடுக்குமளவுக்கு அற்புதமாக நடித்திருக்கிறார்.

விவேக், மும்தாஜ் நகைச்சுவை பரவாயில்லை. கவிதைவரிகள் வைரமுத்து. இசை ஹரிஸ் ஜெயராஜ். பாடலகளில் ஒரு சில மனதைத் தொடுகின்றன. ஒளிப்பதிவு கே.வி.ஆனந் அற்புதம் கொடுக்கின்றன. கதை, திரைக்கதை இயக்கம் காந்தி கிருஷ்ணா.

செல்லமே செல்லாக்காசு.

- PNS -

# ஆதி மனிதர்கள்

இந்தோனேசியாவில் இருக்கின்ற சுமத்திரா காடுகளில் படமெடுக்கச் சென்ற இருவர் அங்கே ஆதி மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் சிலவற்றை சேகரித்துக்கொண்டு வந்துள்ளனர். அங்கே அவர்கள் கூடாரமடித்து வாழ்ந்ததற்கான சான்றுகள் இவ்வளவு ஆண்டுகள் கழிந்தாலும் இன்னும் இருக்கின்றன. சிவப்பும் மண்ணிறமும் கலந்த தலை மயிர்களும், உரோமங்களும் ஆதி மனிதர்களுடைய மனிதக்குரங்குத் தன்மையை காட்டுவதாக உள்ளன. அத்துடன் அங்கே காணப்படுகின்ற பாதச் சுவடுகள் மனிதர்களுடைய பாதச்சுவடுகள் போலல்லாமலும், குரங்குகளுடைய பாதச் சுவடுகள் போலல்லாமலும் காணப்படுகின்றன. இதிலிருந்து ஆதிமனிதர்கள் அந்த இடத்தில் பலகாலமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.





இந்த இடத்திலே ஆராய்ச்சி 1998 ஆம் ஆண்டு தொடங்கியது. ஆனால் அங்கே இருக்கின்ற பயங்கரமான கொடிய விலங்குகளால், ஆராய்ச்சியாளர்கள் பயமுறுத்தப்பட்டு திரும்பினார்கள்.

ஆனால், இப்பொழுது ஆறு வருடங்கள் கடந்தபின் செய்யப்பட்ட ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன.

2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, 'ஒறாங்கொட்டான்' என்ற குரங்கு மனிதனைபோல் நடக்கக்கூடிய ஒருவகைக் குரங்காக இவை இருக்கலாம் எனக் கண்டறியப்பட்டிருக்கிறது.

# புற்றுநோயாளிக்கு ஆரோக்கியமான குழந்தை

புற்றுநோயால் அவதிப்படுகின்ற கர்ப்பிணித் தாய்மார்கள் - தங்களின் குழந்தைக்கும் இந்த நோய் தொற்றிவிடுமோ என அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குப் புற்றுநோய் வந்ததை அறிந்தவுடன், உடனடியாகக் குழந்தை பெறுவதை விரும்பவில்லை. அப்படியிருந்தும் குழந்தை பெறுவதை விரும்புபவர்கள், தங்களுடைய கருப்பையை எடுத்து விடும்படியும், அத்துடன் எடுத்த கருப்பையை வேறு ஒருவருக்குப் பொருத்துவதன் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெறமுடியும் எனவும் கருதுகிறார்கள். இதனை வைத்தியர்களும் அங்கீகரித்துள்ளார்கள். இதனால், ஆயிரக்கணக்கான குழந்தைகள் புற்றுநோயின்றிப் பிறப்பதற்கு வாய்ப்பாகிறது. கடந்த ஏப்ரல் 2003 ஆம் ஆண்டில் முதல்தடவையாக புற்றுநோயுடைய ஒரு பெண்மணியின் கருப்பையிலிருந்து ஆரோக்கியமான குழந்தை பெற்றெடுக்கப்பட்டது. இதனை வெற்றிகரமாகச் செய்துமுடித்தது ஐரோப்பாவின் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம். தற்போது 146 புற்றுநோய்த் தாய்மார்கள் இப்படியான ஆய்வுகளில் ஈடுபட்டுக் கொண்டுவருகிறார்கள். அவர்களும் காலப்போக்கில் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார்கள் என மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.



# சாம்சங் கம்பனி எழுச்சியும் - வீழ்ச்சியும்

கொரிய நாட்டுத் தயாரிப்பாகிய சாம்சங் இலத்திரனியல் சாதனங்கள் மிக மலிவானதாக இருப்பது யாவரும் அறிந்ததே. ஆனால், தற்பொழுது சாம்சங் கம்பனியுடைய கணினித் தாயாரிப்புக்குழு அண்மையில் ஏற்பட்ட கணினிகளின் சிப்ஸ் கோளாறால் குழம்பிப்போயுள்ளது. ஆனாலும், அவர்களுடைய தயாரிப்புகள் கிட்டத்தட்ட 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் மற்றக் கம்பனிகளின் சிப்சிலும் பார்க்க சாம்சங் கம்பனியின் சிப்ஸ்கள் அழியாத்தன்மை கொண்டனவாகக் காணப்பட்டமையே ஆகும். மொபைல் கையடக்கத் தொலைபேசி உலகில் தனக்கென்று ஒரு முத்திரை பதித்திருக்கின்ற இந்த நிறுவனம் மெமரி சிப்ஸ்களை இந்தக் கையடக்கத் தொலைபேசிகளில் புகுத்தியுள்ளது. இது மொபைல் போன் விற்பனையை அதிகரிக்கின்ற ஓர் நிகழ்ச்சியாக உள்ளது. அண்மையில் வளர்ந்த சாம்சங் நிறுவனம் தன்னுடைய எல்லாச் சாதனங்களிலும் புதுமைகளைப் புகுத்தினாலும், கையடக்கத் தொலைபேசிகளில் மட்டும் மிகுந்த லாபம் அடைந்திருப்பதை எவரும் மறுக்கமுடியாது.



ஆனாலும், இவற்றின் உள்ளீடுகள் இலகுவில் பழுதடைவதாகவும், அவற்றுக்கு காரணம் உள்ளீடுகளின் விலை வீழ்ச்சியும் ஆகுமென, தொழில் நுட்பவியலாளர்கள் அடித்துக் கூறுகிறார். இப்படியேபோனால் சாம்சங் கம்பனி வீழ்ச்சியடைந்துவிடும் எனவும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

# பக்றீரியாக்களின் தோற்றம்

நோய்த் தொற்றை உண்டாக்குகின்ற பக்றீரியா எவ்வாறு உருவாகின்றது என்பதைப் பற்றிய ஆய்வுகள் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றன. அங்கே இவற்றின் தோற்றம் பற்றி ஆராய்ந்த பொழுது, இவையும் சுவாசிப்பதற்கு ஒட்சிசன் வாயுவையே பயன்படுத்துகின்றன என்ற முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது. நிமோனியா நோயை உருவாக்குகின்ற அமீலாகூட இவ்வகைதான் என, ஆராய்ச்சியின் முடிவில் விஞ்ஞானிகள் கூறியிருக்கிறார்கள். பக்றீரியாவுக்கு எதிராக மருந்துகள் ஒரே மாதிரியாக அமைவதில்லை. ஏனெனில், ஒவ்வொருவகை பக்றீரியாவும் ஒவ்வொருவகையான தோற்றப்பாட்டையும், வெவ்வேறு வகையான செயற்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. சில பக்றீரியாக்கள் சாதாரணமான நோய்க்காவிகளாக இருக்கின்றது. இவற்றுக்குச் சாதாரண நோய் எதிர்ப்பு மருந்துகள் போதுமானவை. தற்போது அதியுயர் நோய் காவிகளாக இருக்கின்ற பக்றீரியாக்களுக்கு எடித்திரோமைசின் நல்ல எதிர்ப்பைக் கொடுக்கின்றது என, வைத்தியர்கள் கூறுகின்றார்கள். ஆனால், லீஜன்நிலா என்ற பக்றீரியம் தாழ்வான ஒட்சிசன் நிலைமைகளிலும் உயிர்வாழக்கூடியது. அத்துடன், புதிய வகைப் பக்றீரியாவாகிய கொக்சிலா கூட வைத்தியர்களுக்கு சவால் விடக்கூடியதாக உருவாகியிருப்பதாக அமெரிக்காவின் சுகாதாரத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.









# ரீவி கேம் உடன் கையடக்கத் தொலைபேசி

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு கமரா மற்றும் விடியோ ஆசை எல்லாம் போய், இப்போது ரீவிகேம் ஆசை உருவாகியிருக்கிறது. உண்மையில் தற்போது சந்தைக்கு வந்திருக்கின்ற நவீன ரீவிகேம்கள் ஏதோ ஒரு வகையில் மக்கள் மனதில் இடம்பிடிப்பதாலும், சில நாட்களின் பின்பு சலிப்புத் தன்மையைக் காட்டக்கூடியவாறே உள்ளன. ரீவிகேம்களுடன் கூடிய கையடக்கத் தொலைபேசிகளை உற்பத்தி செய்வதில் முன் நிற்கின்ற சொனி நிறுவனம் - 2006 ஆம் ஆண்டளவில் உலகளாவியரீதியில் ஒரு புதிய வகை ரீவிகேமை வெளிவிட இருக்கிறது. ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள் இந்தவகைக் கையடக்கத் தொலை பேசிகளின் வருகைக்காகக் காத்திருக்கிறார்கள்.






ஐரோப்பாவில் 2005 ஆம் ஆண்டில் வந்த ஒரு வகையான கையடக்கத் தொலைபேசியில் சாத்திரம் பார்க்கின்ற வசதிகள் இருந்தன. அதனை வெளியிட்டது மோட்டோரோலா நிறுவனம். இது 3.8 அங்குல கலர்த்திரையையும் தன்னகத்தே கொண்டது. இதனைவிட ஜிஸ்மொன்டோ என்ற கையடக்கத் தொலைபேசியை சாம்சங் நிறுவனம் விட்டிருக்கிறது. இது 2.8 இஞ்சி மற்றும் கலர்த்திரைகொண்டது. இது முற்றுமுழுதாக செய்மதிக்கட்டுப்பாட்டைக்கொண்டது. தற்போது காணப்படுகின்ற உன்னத ரிவிகேம், கையடக்கத் தொலைபேசி இதுவாகும்.

# வன்னியில் அபிவிருத்தித் திட்டங்கள் மேலும் முன்னெடுக்கப்படவேண்டும்

## தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவிப்பு



(மன்னார்)

பல வழிகளிலும் பின்தங்கியிருந்த வன்னிப் பிரதேசம் இன்று ஓரளவு அபிவிருத்தியை நோக்கி முன் நகர்ந்து வருகின்றது என தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மன்னாரில் நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

. அவர் மேலும் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

சில அபிவிருத்திட்டங்கள் வன்னியில் முன்னெடுக்கப்படுகின்ற போதும் மேலும் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. இதனையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

பள்ளமடுப் பகுதியில் அமைக்கப்பட்ட மருத்துவமனைக் கட்டடம், விடத்தல்தீவுப் பகுதியில் அமைக்கப்பட்ட மீன்பிடி அலுவலகம் ஆகியன நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சுஜீவன், மன்னார் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (201)



## வன்னிப் பதிவுகள்

### கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவீரர் நாள் தொடர்பான ஏற்பாட்டுக் கலந்துரையாடல் அண்மையில் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்டமட்ட மாவீரர் தின செயற்பாட்டுக் குழு தெரிவு செய்யப்பட்டு, சிறப்பு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### ‘விழி’ இதழ் வெளிவந்துள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் ‘விழி’ மருத்துவ இதழின் 49 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழ் பற்களின் ஆரோக்கியத்தைப் பேணுவோம், மது, போதைப் பொருளினால் ஏற்படும் தாக்கம் போன்ற கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போத்தலால் குத்தப்பட்டு படுகாயம்

(வவுனியா)

வவுனியா இலுப்பையடிப் பகுதியில் ஓட்டோச் சாரதி ஒருவர் போத்தலால் குத்தப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இலுப்பையடியைச் சேர்ந்த ஓட்டோச் சாரதியான அசிஸ் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தெருவில் சென்ற ஒருவருக்கும் குறிப்பட்ட ஓட்டோச் சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இதற்குக் காரணமெனத் தெரியவருகிறது. (03)

### 5 பேருக்கு குளவி கொட்டியது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் குளவிகள் கொட்டியதால் பாதிக்கப்பட்ட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படனர்.

கடந்த சனிக்கிழமை வட்டக்கச்சி புதுப்பாலத்தடி வீதியில் சைக்கிளில் சென்றவர்கள் மீது குளவிகள் கொட்டியதில் 5 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இராமநாதபுரம் கால்வாய் புனரமைக்கப்படவில்லை

(இராமநாதபுரம்)

வட்டக்கச்சி சந்தையில் இருந்து இராமநாதபுரம் செல்லும் . பாதையில் மேலதிக நீர் வெளியேறும் கால்வாய் நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அததுடன் மாரிகாலத்தில் இந்த வீதியால் செல்வதும் கஷ்டமான நிலையாக காணப்படுகின்றது. உரியவர்கள் கவனம் எடுத்து இதைத் திருத்தியமைக்க ஆவன செய்யுமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (இ)

## மாலதி நினைவாக மருத்துவ முகாம்

(பூநகரி)

பூநகரியில் 2ஆம் லெப். மாலதியின் 17 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை போராளி மருத்துவர் நளா தலைமையில் தியாக தீபம் திலீபனின் மருத்துவமனை மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவமுகாம் இடம்பெற்றது.

## பள்ளமடு மருத்துவமனை புதிய கட்டடத் திறப்பு விழா

(மன்னார்)

மன்னார் பள்ளமடு மருத்துவமனையின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பொதுச் சுடரை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.ஆர். யூட் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண் ஏற்றிவைத்தார். தொடர்ந்து புதிய கட்டடத் தொகுதியான நிகொட்திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அருண், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமனற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

## வன்னோரிக்குளம் பிரதான வீதி நிறைவடையாத நிலையில்

கிளிநொச்சி - முறிகண்டி, வன்னேரிக்குளம் பிரதான வீதி புனரமைப்பு வேலைகள் நிறைவு பெறாத நிலையில் உள்ளது.

இந்த வீதி முறிகண்டியில் இருந்து அக்கராயன் மருத்துவமனைவரையிலான 7 மைல் தூரம் கிரவல் மண் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த மருத்துவமனையில் இருந்து ஆனைவிழுந்தான் சந்தி வரையிலான 3 மைல் தூரம் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் தற்போது மழை காரணமாக குழிகளில் நீர் தேங்கியுள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துப் பயணிகளும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர்.

## பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொது மக்களின் எதிர்ப்பை அடுத்து விடுவிப்பு

மன்னார் பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இருவர் பொதுமக்கள் தெரிவித்த எதிர்ப்பை அடுத்து விடுதலை செய்யப்பட்டனர்.

வழமைக்கு மாறாக நேற்றுமுன்தினம் பஸ் நிலையப் பகுதியில் திறந்திருந்த முஸ்லிம் கடைகளை மூடும்படி குறிப்பிட்ட இரு இளைஞர்களும் தெரிவித்ததாகவும் இதனைத் தொடர்ந்து முஸ்லீம் வியாபாரிகளுக்கும் இளைஞர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதை அறிந்த பொதுமக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தின் முன்னே இவர்களை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுதது இளைஞர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். (201)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் படுகாயம்!

(வவுனியா)

வவுனியா - சாந்தசோலை பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த விபத்தில் வவுனியா சாந்தசோலையைச் சேர்ந்த ரம்சன் (வயது 5) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

## கிளிநொச்சி - அம்பாள்குளத்துக்கு தபால் விநியோகிப்பவர் இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - அம்பாள்குளம் பகுதிக்கு தபால் விநியோகத்தை மேற்கொள்வதற்கு இதுவரை தபால் விநியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பகுதி மக்கள் தபால்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் இந்தப்பகுதி மக்களுக்கான தபால்கள் அனைத்தும் அம்பாள் குளம் உப அஞ்சல் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் மக்கள் தூரஇடங்களில் இருந்து வந்து தபால்களைப் பெறவேண்டியிருப்பதால், தமது சிரமத்தைக் கருத்திற் கொண்டு மேற்படி பிரதேசத்திற்கு நிரந்தர தபால் விநியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அடுத்த ஆண்டில் 376 வீடுகள் அமைப்பு

கிளிநொச்சியில் உலகவங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டில் கிளிநொச்சியில் 376 வீடுகளை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை. போரினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு இந்தப் புனரமைப்பு நிதியானது மிகச் சிறிது எனவும், மக்களது நலன் கருதி இவை போன்ற திட்டங்களில் அதிக கரிசனை செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

கட்டைக்காடுக் கிராமத்தில் நிகொட் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட கடற்தொழிலாளர் இளைப்பாற்று மண்டபத்தைக் காணலாம்

(21)





க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவருக்கான நடமாடும் ஆய்வு கூடச் சேவை வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களைப் படத்தில் காணலாம்.

படம்: வட்டக்கச்சி செய்தியாளர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அஞ்சுவது ஓரும் அறமே ஒருவனை*
*வஞ்சிப்பது ஓரும் அவா.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் அரசியல் நகர்வுகளும் அவரது ஆழ்மன விருப்பார்வமும்

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னெடுப்பை இழுத் தடித்து தனது இன்றைய அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் கூடியதும், சர்வதேச சமூகத்தின் பேச்சுவார்த்தைகள் தொடர்பான அழுத்தங்களைச் சமாளித்து காலத்தைக் கடத்தும் திட்டத்தின் அடிப்படையிலானதும், எதிரக கட்சிகளை தனது அரசியல் வியூகத்திற்குள் கொண்டுவரும் பூலோபாயத்தின் ஒரு அம்சமுமான தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கும் ஜனாதிபதியின் செயல் நோக்கத்தை - பெரும்பாலும் சகல எதிர்க்கட்சிகளும் எதிர்த்து, அவரின் அழைப்பினைப் பகிஷ்கரிக்க முடிவெடுத்துள்ள போதும், அவர் அந்த ஆலோசனைச் சபையை அமைப்பதற்கான அங்குரார்ப்பணக கூட்டத்தை நடத்துவதில் விடாப்பிடியாக உள்ளமையானது, இலங்கையின் இனவிவகாரம் தொடர்பான அமைதிமுயற்சிகளில் அவர் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாராக இல்லை என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் பரிமாணமானது - சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு, ஆலோசனைக் குழு அமைப்பு, அதிகாரப் பரவலாக்கல் திட்டம், போன்ற ஆரம்பக்கட்டங்களைக் கடந்து - சர்வதேசமட்டத்தில ஆராயப்பட்டும், விவாதிக்கப்பட்டும், ஆலோசனை பகிரப்பட்டும், பல்வேறு படிநிலைகளைக் கடந்து முன்னேறிய நிலையில், இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்து முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ள நிலையில், மீண்டும் தேசிய ஆலோசனைச் சபை என்ற குழப்பத்தை உண்டுபண்ணும் அமைப்பொன்றினை உருவாக்க ஜனாதிபதி தவிரம் காட்டுவதானது, பிரச்சினையை மீண்டும் அடிநிலைக்குக் கொண்டுபோய், மீண்டும் ஆரம்பக் கட்டமொன்றை புதிதாகத் தோற்றுவிக்கும் அவரது ஏமாற்று யுத்தியையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

சமாதான முயற்சிகளில் ஜனாதிபதிக்கு உண்மையில் ஆத்மார்த்தமான ஆர்வமிருப்பின் இப்படியான தந்திரோபாய ரீதியிலான அணுகுமுறைகளைக் கையாள வேண்டிய அவசியமேயில்லை.

நேரடியாக விட்ட இடத்திலிருந்து சமாதான முயற்சிகளை நேர்மையாக அவரால் ஆரம்பிக்க முடியும். இன்றைய சமாதான சூழலுக்கு வயது இரண்டாண்டுக்கும் மேலாகிவிட்டது. போர் நிறுத்த உடன்பாடு தொடர்கிறது, புரிந்துணர்வு உடன்பாடு இன்னமும் அமுல்செய்யப்பட்டே வருகிறது.

சமாதானப் பேச்சுக்கள் ஒருகட்டத்தில் இடைநிறுத்தமடைந்துள்ளதேயன்றி முறிந்து விடவில்லை. அதே சமாதான அனுசரணையாளர்கள்தான் - அதாவது நோர்வே அரசுதான் - இன்னமும் விட்டஇடத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க வைப்பதற்கான முயற்சிகளில் சளைக்காது ஈடுபட்டும் வருகிறது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகள் மீது தமக்குள்ள பற்றுறுதியையும் சமாதானம் தொடரப்பட வேண்டும் என்பதில் தமக்குளள விருப்பார்வத்தையும் முன்னுக்குபின் முரண்பாடுகள் ஏதுமற்றவகையில் - ஒரேகருத்து நிலைப்பாட்டுடன் சர்வதேச சமூகத்திற்கும் அரசுக்கும் தொடர்ந்தும் வெளிப்படுத்தியே வருகிறார்கள்.

இன்றையநிலையில் ஜனாதிபதி ஒருவிடயம் குறித்து தமதும், அரசினதும் தெளிவான நிலைப்பாட்டினை எந்த விதமான 'மழுப்பலும், அழாப்பலுமின்றி வெளிப்படையாகக் கூறினால் போதும்' என்ற நிலை இருக்கையில் அதனைக் கூறுவதை விடுத்து புதிய சபைகள் அமைத்தல், ஆலோசனை மேற்கொள்ளல், முடிவெடுத்தல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் என்ற அபத்தமானதும், அர்த்தமற்றதுமான காலம் கடத்தும்-காதில்பூச்சுற்றும் முயற்சிகளில் இறங்கியிருப்பது - அவரின் சமாதானமுயற்சிகள் எந்தவிதமான எதிர்கால நம்பிக்கையும் கொண்டதாக இல்லை என்பதை உறுதிசெய்யும் ஒன்றாகவே உணரவைப்பதாக உள்ளது.

எதிர்க்கட்சிகள் அனைத்துமே - (ஹெல உறுமய உட்பட) ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைச் சபைத்திட்டத்தை நிராகரித்துள்ள நிலையில், சமாதானத்தை ஆரம்பகாலம் முதலே முற்றிலும் எதிர்த்து வரும் தனது பங்காளிக்கட்சியினரை மட்டுமே வைத்துக் கொண்டு தேசிய ஆலோசனைச் சபையை உருவாக்குவதன் மூலம் ஜனாதிபதி என்ன செய்யப் போகிறார் என்பது தெரியவில்லை.

நிச்சயமாக இந்தச்சபைக்குள் இருக்கப்போகும் அவரது பங்காளிக கட்சியினர்கள், இனிமேல் பேச்சுவாத்தைகளை ஆரம்பிப்பதற்கான பிரதான அடித்தளமாக இருக்கவேண்டிய இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான விடயத்தில் சாதகமான முடிவுகள் எடுக்க முன்வருவார்கள் என்று தோன்றவில்லை.

இந்த நிலையில் இந்தத் தேசிய சமாதான சபையோ அல்லது வேறு எந்த அமைப்புக்களோ முதலில் இடைக்கால நிர்வாக அதகாரசபை தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறவேண்டிய உடனடி அவசியமுள்ளது இதனை நிராகரிப்பதோ, அல்லது அதற்கு மாற்றீடாக வேறு அர்த்தமற்ற அரசு தனக்கு சாதகமானதெனக்கருதும் ஒரு திட்டத்தை முன்வைப்பதோ சமாதானம் நோக்கிய ஆரோக்கியமான ஒரு அரசியல் பூலோபாய நகர்வாக இருக்கப்போவது கிடையாது.

இன்றைய அரசியல் சூழலானது தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகள் அனைத்தும் சமாதானமுயற்சிகள் தொடர்பாக ஒரே கருத்து நிலைப்பாட்டுக்கு வரும் சாத்தியத்தை நிராகரிப்பதாகவே உள்ளது.

ஜனாதிபதியின் உள்மனவிருப்பும் அதுவாகவேதான் இருக்கிறது என்பதையே அவரது செயற்பாடுகள் உணர்த்துவதாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




# மிதிவெடிகளை அகற்றும் பணிக்கு நிதியுதவிகள் கிடைப்பது குறைவு!

### தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளை அகற்றுவதற்காக உதவி வழங்க முன்வந்துள்ள நாடுகளிடமிருந்து நிதி உதவிகளைத் தொடர்ந்து பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலை மாவட்டப் பணிப்பாளர் கு.தேவராஜா வெளியிட்டார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

'மக்' நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் தற்போது மிதிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 63 உள்ளூர் பணியாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் 57 இடங்களில் மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் 38 இடங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாலையடிவெட்டை, வெல்லாவெளி மற்றும் புல்லுமலை ஆகிய இடங்களில் இந்தப் பணி பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளது. அடுத்த கட்டமாக ஆயித்தியமலை மற்றும் ஓமடியாமடு ஆகிய இடங்களில் ஆரம்பிக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது.

ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் இந்தப் பணிக்கு உதவி வருகின்ற போதிலும், அதன் நிதி உதவிகளைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம், வட்டு. துணைவி அ.மி.த.க. பாடசாலை, சுதுமலை அ.த.க. பாடசாலை, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், சோதிவேம்படி வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவி வெற்றிடத்துக்கு இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2, I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன அறிவித்துள்ளார்.

## தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில்

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ள இந்தத் தேசிய மட்டப் போட்டிகளில் மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்துக்கென தெரிவான பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்தத் தமிழ்த்தினப் போட்டிகளின் இறுதி நாள் வைபவமும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற நிகழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளும் மேடையேற்றப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

# மதுபான நிலையத்தை மூடுமாறுகோரி சமுர்த்தி செயலணி அரச அதிபருக்கு கடிதம்

பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் குருநகர் கிழக்கில் அமைக்கப்பட்டுள்ள மதுபான விற்பனை நிலையத்தை மூடுமாறுகோரி கிராமிய சமுர்த்திச் செயலணியினர் அரசஅதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

மக்கள் குடியிருப்புக்கள் அடர்த்தியாகவுள்ள குருநகர் கிழக்கின் டேவிற்வீதியும், பாங்ஷால் வீதியும் இணையும் சந்திப்பகுதியில் அண்மைக்காலமாக அறிவித்தல் பலகையோ விளம்பரப்பலகையோ இல்லாமல் மதுபானசாலை ஒன்று வீடொன்றில் இயங்கிவருகிறது.

இந்த மதுபானசாலையால் அந்தப்பகுதியில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பேற்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மது அருந்துவோர் வீதியில் கலாட்டாவில் ஈடுபடுவதுடன் மதுப்போத்தல்களையும் வீதியில் உடைத்து வருகின்றனர். அத்தோடு தகாத வார்த்தைகளையும்,. பேசுவதுடன் இரவு வேளைகளில் கூச்சல் குழப்பங்களிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிகக நேரிடுவதால் அங்கிருந்து இந்த மதுபானசாலையை அகற்றுமாறும், இந்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் பாடசாலைகள், தேவாலயங்கள் காணப்படுவதாகவும், சுட்டிக்காட்டி யாழ்.அரச அதிபர், யாழ். மாநகரசபை சுகாதாரப் பணிப்பாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்குமான கடிதங்களை குருநகர் கிழக்கு கிராமிய சமுர்த்தி செயலணி அனுப்பிவைத்துள்ளது.

இது குறித்து அந்த மதுபானசாலை உரிமையாளாரிடம் கேட்டபோது அரச அனுமதிப்பத்திரம் பெற்றபின்னரே அங்கு மதுபான நிலையத்தை ஆரம்பித்திருப்பதாகவும், இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான விற்பனைகள் அதிகரித்திருப்பதாலேயே அரச அனுமதியுடன் தான் அங்கு மதுபானக்கடையை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அந்தப்பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையுடன் கசிப்பு வியாபாரமும் நடந்துவருவதாக அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

(ப.கு)

## பஜாஜ் பாவனையாளர்களுக்கு இலவச சேவை முகாம்

பஜாஜ் மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கான சேவைமுகாம் தற்போது யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனியால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்த இலவச பஜாஜ்சேவை முகாமினால் யாழ்.மாவட்டத்திலுள்ள பஜாஜ்வாகன பாவனையாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இதில் பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் இலவசமாக பழுதுபார்த்துக் கொடுப்பதோடு விஷேட கழிவுவிலையில் பொருட்களும் வழங்கப்படுவதோடு, வாகனம் சம்மந்தமான நிபுணர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இந்தச் சேவை முகாம் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சுன்னாகம், சாவகச்சேரி, தெல்லிப்பளை போன்ற இடங்களிலும் நடைபெறவுள்ளதால் மேற்படி வாகன உரிமையாளர்கள் அனைவரும் பயனடையுமாறு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கட்டுரை...

கே.ரீ.கணேசலிங்கம்

# புஷ் - கெரி விவாதமும் அமெரிக்கப் பாதுகாப்பும்




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் பகிரங்கப்படுத்தல், கெரி-புஷ் விவாத மேடையில் அரங்கேறியுள்ளது. இந்தத் தேர்தல் வெறுமனே இரண்டு தனி மனிதர்களது ஆளுமைக்கு இடையிலான போட்டி என்பதையே மியாமி பல்கலைக்கழகத்தில் நட்ந்த விவாதம் உணர்த்தியுள்ளது. ஆட்சியிலுள்ளவரின் குறைகளை அதிகம் விமர்சிக்க வாய்ப்புடைய புதிய வேட்பாளர் தன் திறமைகளால் புஷ்ஷை திணறடிக்க முயன்றார். பதிலுக்கு புஷ் சாதாரணமானவர் அல்ல என்பதை கெரிக்கும் அமெரிக்க மக்களுக்கும், உலகுக்கும் உணர்த்த தவறவில்லை. இருவரது ஆளுமைகளையும் ஈராக் விடயத்துடன் மட்டுமே மையப்படுத்தி வெளிப்படுத்தினர். இதனை விரிவாக நோக்குவோம்.

ஈராக் மீதான படையெடுப்பை குறை கூறும் கெரி அதனை எப்படி நிகழ்த்தியிருக்கலாம் அல்லது நிகழ்த்தாமல் விட்டிருந்தால் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நன்மைகள் என்ற நோக்கில் தான் புஷ்ஷை விமர்சிக்கின்றார். அவர் கூறும் விடயங்களில் இரண்டு முக்கியமானதாக அமைந்திருந்தன.

ஒன்று போருக்கு பின்பு ஈராக்கை எப்படி நிர்வகிப்பது என்பது பற்றி தெளிவான திட்டமிடலை புஷ் கொண்டிருக்கவில்லை. அதனால் அமெரிக்கர்களும், அமெரிக்கப் பொருளாதாரமும் எப்படி விரயமாகின்றது என்பதை கோடிட்டு காட்டுவதன் மூலம், எவ்வாறு அதனை செய்திருக்கலாமென மறைமுகமாக கூறமுயன்றுள்ளார்.

இரண்டாவது - நட்பு நாடுகளின் முறிவை புஷ் கருத்தில் கொள்ளாமல் போர் தொடுத்தமை மட்டுமன்றி போருக்கு பின்பு பல நட்பு நாடுகள் ஈராக்கை விட்டு வெளியேறுவது தவறானது எனக்குறிப்பிட்டுள்ளார். அப்படியாயின் நட்பு நாடுகளுடனான உறவை பலப்படுத்துவதும் அதன் ஒத்துழைப்புடனேயே ஈராக்கை ஆக்கிரமித்திருக்க வேண்டும் எனவும் கெரி வாதிடுகின்றார்.

இவையிரண்டும் உணர்த்தும் உண்மைகள் சற்று ஆழமாக ஆராய வேண்டியதொன்றாகும். ஏனெனில், கெரி மிகத்திட்டமிட்டு துல்லியமாக உலகத்தின் ஒத்துழைப்பையும் பெற்றே ஈராக் விடயத்தை கையாண்டிருக்க வேண்டும் என்கிறார். அப்படியாயின் கெரி மிக சிறந்த அமெரிக்க தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பவராகவும், அமெரிக்க வல்லரசுக் கொள்கையை நிலை நிறுத்துபவராகவும் காணப்படுகின்றார் என்பதே இதன் மறுசிந்தனையாகும்.



கெரி தனது ஈராக் கொள்கை பற்றியும், வெளிநாட்டுக் கொள்கை பற்றியும் தெளிவான விளக்கம் முன்வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஊடகங்களால் முன்வைக்கப்பட்டு வருகிறது. இது கெரியின் கருத்து நிலையை சரிவர மதிப்பீடு செய்யாதவர்களின் வெளிப்படுகையாகும். யதார்த்தத்தில் கெரி தனது வெளிநாட்டுக் கொள்கையை மறைமுகமாக உலகத்துக்கு வெளிப்படுத்திவிட்டார். இந்த வகையான வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்கப் பேரரசு வாதத்துக்கு மிகச்சிறப்பானதாகும். உலக பயங்கரவாதத்தை முறியடிக்க கெரி கொண்டிருக்கும் அணுகுமுறையே உலகை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதகான தந்திரமாகவுள்ளது.

புஷ் அமெரிக்காவைப் பாதுகாப்பதில் தமது கொள்கை சரியானதென வாதிடுகின் றமை அவரது கடந்தகாலக் கொள்கையைப் படம் பிடித்துக் காட்டுவதாகவே இருந்தது. அப்படி அமெரிக்காவைப் பாதுகாக்கும் ஜனாதிபதியின் ஆட்சியிலேயே செப்ரெம்பர் 11 தாக்குதல் நிகழ்ந்தது மட்டுமன்றி, சிலரது ஆட்சியின் பலவீனங்களே அதற்கு வழிவகுத்ததென்பது அமெரிக்க மக்களுக்கு ஒன்றும் புதியதல்ல.

புஷ்ஷின் உரையில் அமெரிக்கத் தேசியம் பற்றிய தொடுகை மேல்நிலைப்படுத்தப்பட்டிருந்தது. அமெரிக்கத் தேசியத்தைக் கிளறுவதன் மூலம் அமெரிக்காவை மீளவும் ஆளலாமெனத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறார் புஷ். அவரின் பிரசார உத்திகளை வகுக்கும் வாடகை மூளைகளும், புஷ்ஷும் இணைந்து ஒரு தெளிவான அமெரிக்கத் தேசியத்தை முன்னிறுத்தி வருகின்றனர்.



அதனையே புஷ் கெரியுடன் நிகழ்த்திய விவாதத்திலும் அமெரிக்காவின் பாதுகாப்பைப் பற்றிய கருத்தை முன்வைத்தார். அமெரிக்காவைப் பாதுகாக்கக் கூடிய ஜனாதிபதி தான் என்பதே புஷ்ஷின் வாதம். இதனை முறியடிக்கக் கெரி பயன்படுத்திய பதில்வாதம் பெரியளவில் எடுபடாதுபோல் காணப்பட்டாலும் அதில் ஆழமான, துல்லியமான அணுகுமுறை அமைந்திருந்தது.

அமெரிக்கா பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருந்தால், பயங்கரவா தத்தை அமெரிக்கா தாக்கு வதே சிறப்பானதென கெரி பதிலளித்தார். அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அல்-கொய்டா மீது தாக்குதலை நிகழ்த்துவதே பொருத்தமானதன்றி, ஈராக் மீது போர் தொடுப்பதில் பிரயோசனம் எதுவுமில்லை என கெரி வாதாடினார்.

உண்மையில் பயங்கரவாதத்தைத் திட்டமிட்டு வளர்த்தவர்கள் அமெரிக்கர்களே. பின்லேடனை வெள்ளைமாளிகைவரை விருந்தாளியாகப் பராமரித்து அவனுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அள்ளிக் கொடுத்து, வளர்த்து தமது எதிரிகளை உடைப்பதற்காகத் திட்டமிட்ட அமெரிக்கா, இன்று பின்லேடனை அழிக்கப் போராடுவதென்பது அதன் கொள்கையின் பலவீனமேயன்றி வேறெதுவுமில்லை.

கெரி குறிப்பிடுவதுபோல் பின்லேடனைத் தாக்குவதை விடுத்து, ஈராக் மக்கள் மீது போர் தொடுத்தது நியாயமற்ற ஆக்கிரமிப்பைக் காட்டுகிறது. ஆனால் கெரி ஈராக் போருக்கான அணுகுமுறையைத்தான் குறைகாணுகின்றாரேயன்றி ஈராக் மீது போர் தொடுத்த செயலைத் தவறென விமர்சிக்கவில்லை.

கெரி ஈராக் போருக்கு ஆதரவாக வாக்களித்ததைப் புஷ் வித்தியாசமாகக் கையாண்டார். கெரி ஒரு நிரந்தரமான கொள்கையை ஈராக் பற்றிக் கொண்டிருக்கவில்லை என்றார். இது அமெரிக்காவைப் பாதுகாக்கும் ஜனாதிபதிக்குரிய தகைமையல்ல என்றார் புஷ். ஆனால் கெரி குறிப்பிட்டார் - நான் தவறாகத் தான் வாக்களித்தேனேயன்றி புஷ் போன்று தவறான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்றார்.

அதாவது புஷ் தவறான முடிவை எடுத்ததன் மூலம் அமெரிக்காவின் மக்கள், துருப்புக்கள் ஈராக்கில் கொலலப்பட்டுக் கொண்டிருப்பது துயரமான விடயமெனக் குறிப்பிட்டார். அமெரிக்கரைப் பாதுகாக்கும் கொள்கையை கெரி மறைமுகமாகக் காட்டியுள்ளார். இத்தகைய தலைமைகளை அமெரிக்க மக்கள் பலதடவை தெரிவு செய்துள்ளனர்.



புஷ்ஷின் நடவடிக்கை அமெரிக்க ஆதிக்கத்தை உலகத்தில் நிறுவுவது போன்று காணப்பட்டாலும், அதன் விளைவுகள் பாதிப்பவையாகவே காணப்படுகின்றன. ஒருபக்கம் அமெரிக்கா எழுச்சி கண்டுவந்தாலும் மறுபக்கம் நீண்டகாலத் திட்டங்களை புஷ் வகுப்பவராகவே விளங்குகின்றார்.

இதனால் புஷ்ஷின் நிர்வாகத்தின்கீழ் அமெரிக்காவின் பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் செல்வாக்கு என்பன மங்கியுள்ள தென்பதே அனேக அமெரிக்கவாதிகளின் கருத்தாக அமைந்திருக்கின்றது. இதனால் கெரி அமெரிக்க மக்களின் அபிப்பிராயத்துக் குட்பட்டவராக மாறலாம். அதற்கான சந்தர்ப்பமும் காலமும் உண்டென்பதே பலரது கருத்தாக அமைந்திருக்கின்றது.

கெரி - புஷ் பகிரங்க விவாதத்துக்குப் பின்பு நிகழ்ந்த கருத்துக் கணிப்பில் கெரி முன்னணி வகிக்கின்றார். இருவருக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள்கூடக் காணப்படுகின்றன. குறிப்பாகக் கெரி 46 வீதமான ஆதரவைப் பெறுகின்றபோது புஷ் 21 வீதமான ஆதரவையே பெற்றிருக்கின்றார். கெரியின் விவாதத் திறனை அமெரிக்க மக்கள் சிறப்பான தலைமைக்கான அடையாளமாகக் கருதுகின்றனர்.

கெரி ஆரம்பத்தில் எழுச்சியடைந்தாலும் விவாதத்துக்கு முன்பு புஷ்ஷே முன்னணி வகித்திருந்தார். அமெரிக்காவின் தேசியத்தை முடுக்கிவிட்டு மீண்டும் ஜனாதிபதியாக வரலாமென புஷ் திட்டமிட்டிருந்தார். ஆனால் விவாத மேடை கெரிக்கு மீண்டும் செல்வாக்கை அதிகரித்துவிட்டது. ஈராக் விடயம் மட்டுமே இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தினால் பொருளாதாரமும், அரசியல் போன்ற அமெரிக்காவின் உயிர்நாடியான விடயங்கள் அனேகமாக அமெரிக்க மக்களை மாற்றவே செய்யும் என எதிர்பார்க்கலாம்.

அதனை புஷ் முறியடிக்கப் பாரிய வேலைத திட்டத்தில் குதிக்கவேண்டும். புஷ்ஷின் அத்தகைய நடவடிக்கையைவிட புதிய வேட்பாளரின் அணுகுமுறையைத் தரிசிக்கவே மக்கள் அதிகம் விரும்புவார்கள். இதையும் மீறி மக்கள் புஷ்ஷைத் தெரிவுசெய்வார்களாயின் அமெரிக்காவின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் வேகமாக அழித்துவிடும் நடவடிக்கையாகவே அமையும்.

புஷ்ஷினால் அமெரிக்கா வேகமாக அஸ்தமித்துவிடும். அந்தளவுக்கு புஷ் தீவிரமான ஆட்சியாளனாக மாறி அமெரிக்காவைப் பலவீனப்படுத்தும் அமெரிக்கனாக விளங்குவார். நாட்டுக்காக தலைமை தன்னை அர்ப்பணிப்பதுதான் நாட்டுக்கும் அந்த மக்களுக்கும் சிறப்பு, தலைமைக்காக நாட்டை அர்ப்பணிப்பது என்பதை எந்தக் காலத்திலும் சிறப்பாகக் கொள்ளமுடியாது. இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்தவரே புஷ். அதற்காக கெரி முதலாவது வகையெனத் தற்போது கூறிவிட முடியாது.

புஷ்ஷைப் பொறுத்தவரையில் கெரியைத் தோற்கடிக்க அதிகம் சிரமப்படவேண்டும். ஆனால் கெரிக்கு சுலபம். கெரியிடமுள்ள மிகக்குறைந்த பலவீனம் - எதனையும் அதிகம வெளிப்படையாகப் பேசாதவர். அவரிடம் இருப்பது எது, இல்லாதது எது என்பதைக் கண்டுபிடிப்பது கடினம். அப்படி நோக்கும் போது புஷ் பொய்யுரைப்பவராக இருந்தாலும் வெளிப்படையாகக் கருத்துக்கூறி மூக்கை உடைத்துக் கொள்பவர்.

எனவே புஷ்ஷைவிடக் கெரியே ஆபத்து மிக்கவர் எனக் கருத வாய்ப்புக்களுண்டு. கெரியின் நடவடிக்கைகளுக்குப்பின்னால் ஆழமான திட்டமிடல், துல்லியமான வழி நடத்தல் என்பன காணப்படும். உலகம் முழுவதும் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலோங்காதுவிடினும் குறிப்பிட்ட பிரதேசத்தில் உறுதியான ஆதிக்கம், அல்லது செல்வாக்கு மிக்க அரசாகக் காணப்படும்.

எனவே பகிரங்க விவாதம் மூலமான ஆளுமையானது பரஸ்பரம் அமெரிக்க ஜனநாயகத்தைத் தெளிவுபடுத்துவதுடன் ஜனாதிபதித் தேர்தல் இரண்டு தனிமனிதர்களுக்கிடையேயான போட்டியாகவேயுள்ளது என்பது புலனாகிறது. இதனை விட அமெரிக்கத் தேசியத்தையும், பாதுகாப்பையும் எப்படிப் பேணுகிறார்கள் என்பதும் தெளிவாகிறது. ஒரு ஜனாதிபதி வேட்பாளரின் தேசிய பற்றுதல் என்பதை அனுபவமாகக் கொள்வதே மேலான விடயமாகவுள்ளது. உலகத்தின் தேசியம், தேசியவாதம், தேசிய விடுதலைப் போராட்டம் என்பனவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் இன்றைய காலத்தில் அமெரிக்கத் தேசியத்தை எவ்வாறு பேணப் போராடுகின்றனர் என்பதே விளங்கிக்கொள்ள வேண்டிய அம்சமாகும்.

✡✡✡✡

## இரு முஸ்லிம் குழுக்கள் லெபனானில் மோதல்!

லெபனானின் தென்பகுதி நகரொன்றில் இரண்டு ஷியா முஸ்லிம் குழுக்களுக்கிடையே மோதல் இடம்பெற்றுள்ளதாக லெபனான் பாதுகாப்பு படைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மோதல்கள் ஹிஸ்புல்லா மற்றும் அமல் குழுக்களுக்கிடையே கடந்த சனி இரவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை லெபனான் படையினர் தலையிட்டு தடுத்து நிறுத்தியதாகவும, இந்த மோதல்களில் மூவர் காயமடைந்ததாகவும், தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அல் அராபிய தொலைக்காட்சிக்கு கருத்து தெரிவித்த ஹிஸ்புல்லா அமைப்பின் பிரதித் தலைவர் நயீம் காசிம் - இந்த மோதலானது ஒரு தனிப்பட்ட பிரச்சினை இதற்கும் ஐ.நா.சபை போராளிகளை கலைத்து விடுமாறு கேட்டுக்கொண்ட கோரிக்கைக்கும் எவ்வித தொடர்பும் இல்லையனவும் தெரிவித்தார்.

அரசியல் மற்றும் மதரீதியான சுவரொட்டிகளை இரு குழுக்களும் ஒட்டச்சென்ற வேளையிலேயே இந்த மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மோதல்களின் பின்னர் இரு குழுக்களும் இணைந்து ஸ்திரத்தன்மையை பேணுவது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

# ஈராக்கில் கார் குண்டுத் தாக்குதல்; 21 பேர் உயிரிழப்பு, 96 பேர் படுகாயம்



(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 21 பேர் கொல்லப்பட்டதுடன், 96 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் அமெரிக்க மற்றும் ஈராக் படைகளின் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலேயே நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு வலயப் பகுதியில் ஈராக் படைகளில் இணைவதற்காக பெருமளவானோர் நின்றதாகவும், அவ்வேளை காரில் வந்த தற்கொலைக் குண்டுதாரி காருடன் சேர்த்து குண்டை வெடிக்கவைத்ததாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் கார் மற்றும் ட்ரக் வண்டிகளில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், இவர்களில் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் பி.பி.சி. செய்தியாளர் கரோலின் ஹவ்லி தெரிவித்தார்.

காயமடைந்தவர்களின் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்று ஒரு மணிநேரத்தின் பின்னர் பாக்தாத்தின் மத்திய பகுதியில் அமெரிக்கத் தொடரணி மீது கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதில் 6 பேர் கொல்லப்பட்டு, 15 பேர் காயமடைந்தனர்.

இதனிடையே பலூஜா நகரில் நேற்று அதிகாலை அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 12 பேர் காயமடைந்துமுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவர்களில் 3 பெண்களும் 4 சிறுவர்களும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஈராக் படைகளுக்கு எதிரானவர்கள் ஆயுதங்களுடன் முன்னேறி வருவதை அவதானித்த பின்னர் அவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை மொசூல் பகுதியில் இடம்பெறற மூன்றாவது கார்க்குண்டு தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் அஞ்சலா பவ்மன் தெரிவித்தார்.

பகுபா நகர பொலிஸ் அதிகாரி மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கிளர்ச்சியாளர்கள் பகுபா மாநகர கட்டடங்கள் மீது நடத்திய மோட்டார் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

இதனிடையே பாக்தாத்தின் தென் பகுதி நகரான சயோனா பகுதியில் ஆயுததாரி ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தில் பணிபுரியும் சிரேஷ்ட பெண் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.




## அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான கருத்துக்கணிப்பில் ஹெரி முன்னிலையில்!

(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷும் அவரை எதிர்த்து நவம்பரில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரியும் முதல்முதலாக நேரடி விவாதத்தில் கலந்துகொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புக்களின் அடிப்படையில் ஜோன் ஹெரிகு ஆதரவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரியும் ஈராக்கிய விவகாரம் தொடர்பாக காரசாரமாக வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டனர்.

இவர்களின் வாதப் பிரதிவாதங்களை 60 மில்லியனுக்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் தொலைக்காட்சியூடாக பார்த்தனர்.

தொலைக்காட்சி ஊடாக இருவரது கருத்துக்களைப் பார்த்ததன் பின்னர் அமெரிக்கர்களது கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட்டுவருவதாகவும் அதனடிப்படையிலே செனற்றர் ஜோன் ஹெரி, கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் முன்னணி வகிக்கிறார்.

இது தொடர்பாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று வெள்ளை மாளிகையை நோக்கிய ஓட்டப்பந்தயத்தில் ஜோன் ஹெரி முன்னிலை வகிப்பதாக வர்ணித்துள்ளது.

இதேசமயம் புஷ்ஷுக்கும் ஹெரிக்கும் இடையிலான இரண்டாவது வாதம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதத் தேர்தலில் உபஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் டிக் சென்னி மற்றும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் எட்வேடஸ் ஆகியோருக்கிடையிலான நேரடி வாதப் பிரதி வாதங்கள் இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் தாயகம் திருப்பி அனுப்பப்படுவர்!

### இத்தாலி அரசாங்கம் அறிவிப்பு

சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைந்த 600 வெளிநாட்டவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பும் பணியை அந்நாட்டு அரசு ஆரம்பித்துள்ளது.

ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்டவர்கள் இத்தாலியன் தீவுகளில் ஒன்றான லம்பெருசாவை சிறிய் படகுகளின் மூலம் வந்தடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலனவர்கள் லிபியா ஊடாக சிறிய படகுகள் மூலம் இத்தாலியின் லிம்பெருசா தீவை வந்தடைந்துள்ளதாக இத்தாலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

லம்பெருசாதீவை வந்தடைந்தவர்கள் அருகிலுள்ள நலன்புரி நிலையங்களில் ஒன்றாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் விமானங்கள் ஊடாக அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பிவைக்க இத்தாலிய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே சிரியாவைச் சேர்ந்த 200 பேர் விமானம் மூலம் அங்கு



அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள இத்தாலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் -

இத்தாலியை வந்தடைந்தவர்கள் அனைவரும் அவர்களது சொந்த இடங்களுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள். சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைவோருக்குத் தஞ்சம் வழங்குவதில்லை என்ற இத்தாலியின் புதிய அரசியற்கொள்கை தொடர்ந்து அமுலில் இருக்குமெனத் தெரிவித்தார்.

ஆனால், இத்தாலிய அரசின் இந்தப் புதிய அரசியற்கொள்கையை எதிர்க்கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

## ஈரான் போக்குவரத்து அமைச்சர் நாடாளுமன்றால் பதவி நீக்கம்!



ஈரான் போக்குவரத்துறை அமைச்சர் அஹமட் கோரம் அந்நாட்டு நாடாளுமன்றத்தால் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இவரது பதவி நீக்கத்துக்கு ஈரான் நாடாளுமன்றில் ஆதிக்கம் செலுத்தும் பழமைவாதக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தமையே காரணமாகும்.

258 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஈரானில், அமைச்சருக்கு ஆதரவாக 58 பேரும் எதிராக 188 பேரும் வாக்களித்ததுடன் 9 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இவரை பதவிநீக்கியதற்கு ஆதரவாக பழமைவாதக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்த காரணம் - இவர் விமானம், ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்துக்களை முன்னேற்றவில்லை என்பதாகும்.

வாக்கெடுப்புக்கு முன்னர் கருத்துத் தெரிவித்த ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் - இந்த வாக்கெடுப்பு நடத்தப்படுவதன் மூலம் நாம் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயாரில்லை என அர்த்தமாகாது எனத் தெரிவித்தார்.

ஈரானின் புதுவருட தினமான மார்ச் 20 இலிருந்து இன்றுவரை வீதி விபத்துக்கள் 24 வீதமாக அதிகரித்துள்ளதாக பழமைவாதக் கட்சியின் பிரதித் தலைவர் அலி அஹமட் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த வருடம் ஈரானில் இடம்பெற்ற வீதிவிபத்துக்களால் 25,350 பேர்வரை உயிரிழந்துள்ளதுடன் இது கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்ற வீதிவிபத்துக்களில் கொல்லப்படடவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 5600 பேராக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி நடந்ததிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை ஈரானில் 148 விமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 780 பேர் உயிரிழந்தனர். ஆனால், கடந்த மூன்று வருடங்களில் நாம் 86 விமான விபத்துக்க்ளைச் சந்தித்து, 212 பேரை இழந்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

பதவிநீக்கம் செய்யப்பட்ட போக்குவரத்து அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் 116 பழமைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

இதேவேளை - ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் அமைக்கப்பட்ட சர்வதேச விமானநிலைய கட்டுமானப் பணியிலும் போக்குவரத்து அமைச்சர் மோசடி செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச விமானநிலையம் 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் அமைக்கப்பட்டிருந்ததாகவும், இதனை துருக்கி, ஒஸ்ரியன் நாடுகளின் கட்டுமானப் பணியாளர்களுக்கு வழங்கி, இஸ்லாமிய மதத்தை அமைச்சர் அவமதித்துவிட்டதாகவும் பழமைவாதிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரேயொரு விமானம் தரையிறங்கிய நிலையில் கடந்த மார்ச் மாதத்திலிருந்து இந்த விமானநிலையத்தினை ஈரான் இராணுவம் மூடியுள்ளது. இதற்குக் கூறப்பட்ட காரணம், வெளிநாட்டுக் கட்டுமானப் பணியாளர்களுக்கு இதனைக் கொடுத்து, ஈரானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடாதென்பதாகும்.

ஈரானிய ஜனாதிபதி முஹமட் கதாமியின் சீர்திருத்த அமைச்சரவையிலிருந்து அமைச்சர் ஒருவர் பதவிநீக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

## இஸ்ரேல் படையினர் தாக்குதல்; காஸாவில் மூவர் உயிரிழப்பு!



(காஸா)

காஸா பகுதியில் இஸ்ரேல் படையினர் தொடர்ந்து நடத்திவரும் தாக்குதலில் நேற்றுமுன்தினம் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் நடத்திய வான் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் மீதான தாக்குதல் காஸாவின் கிழக்குப் பகுதியான சாஜியா என்ற நகரத்தில் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் மொகமட் அல் சிம்றி மற்றும் ஹசன் அல் ஜபாரி ஆகிய இருவருமே காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் படையினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் காதுகேட்காதவர் ஒருவர் மற்றும் 13 வயதுச் சிறுவன் உட்பட மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் படை நடவடிக்கை தமக்குப் பூரண வெற்றியளித்திருப்பதாக இஸ்ரேல் அதிகாரியான மோசே யாலூன் தெரிவித்தார். அத்துடன் இந்தத் தாக்குதல் ஒரு சில நாட்களில் நிறைவுசெய்யாமல் வாரக்கணக்கில் நடத்தவும் படையினர் தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

படை நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலிடம் ஐநா. செயலர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ள அதேநேரம் பலஸ்தீன போராளிகளும் இஸ்ரேல் நகர்மீது நடத்தும் றொக்கட் தாக்குதலை நிறுத்தவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## புலிகளுக்கு உதவியதாகக் கூறி மூவர் ஆயுதக்குழுவால் கடத்தல்

### பொலனறுவவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

பொலனறுவ மாவட்டம் கரபொல கிராமத்தில் மூவர் ஆயுதக் குழுவொன்றினால் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களில் ஒருவர் தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், ஏனையோர் பற்றி இதுவரை எதுவித தகவல்களும் வெளியாகவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாகனமொன்றில் வந்தவர்களினாலேயே இவர்கள் கட்டத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

கணபதிப்பிள்ளை சேனாதிராஜா (வயது 46), தர்மலிங்கம் ரஞ்சனி (வயது 26), மற்றும் கே.விஜயகுமார் (வயது 23), ஆகியோர் கடத்தப்பட்ட போதிலும், விஜயகுமார் என்பவர் மட்டும் விடுவிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, குறிப்பிட்ட நபர்களினால் இவர்கள் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கந்த பொலிஸில் இது குறித்துப் புகார் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை, மட்டக்களப்பு-பொலனறுவ மாவட்ட எல்லைப் புறத்திலுள்ள மாதுறு ஓயா - கந்தேகம காட்டுப் பகுதியில் ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டன. மீனவர்களிடமிருந்து கிடைத்த தகவலின் பேரிலேயே இவை கண்டெடுக்கப்பட்டிருந்ததாக அரலகன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

### வேட்டைக்குச் சென்றவர்

## கருணா குழுவினரின் வேட்டுக்கு உயிரிழப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறத்திலுள்ள ஒமடியாமடு காட்டுப பகுதியில், கருணா குழுவினரின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

மட்டக்களப்பு மாவட்ட வாகரை மதுரங்குளத்தில் கடந்த சனிக்கிழமை கருணா குழுவின் பாதுகாப்பு வதிவிடத்தின்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அதன்போது, இராணுவ முகாமிற்குத தப்பியோடிய கருணா குழுவினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகினார்.

ஒமடியாமடு வாசியான தம்பி ஐயா மன்னவன் என்ற 32 வயது இளம் குடும்பஸ்தரே இவ்வாறு பலியாகினார். காட்டிற்கு வேட்டையாடச் சென்ற சமயமே இவர் துப்பாக்கிச் சூடடிற்குள் அகப்பட்டிருக்கலாம் என பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

வேட்டையாடச் சென்ற இவர் நேற்றுமுனதினம் காலைவரை வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் தேடிச்சென்ற சமயம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவரது சடலத்தை கண்டெடுத்தனர்.

### குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட

## பன்னிரு வேங்கைகளின் நினைவு தினம் இன்று!

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச்சதிக்குப் பலியாகி வீரகாவியமான மூத்த தளபதிகள் லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறவுள்ளன.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டு சதிக்குப் பலியாகிய குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகளின் பிரதான நிகழ்வு இன்று வடமராட்சி-தீருவில் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இனறு தீருவில் சந்தியில் இருந்து பேரணி ஒன்று ஆரம்பமாகி தீருவிலில் உள்ள 12 வேங்கைகளினதும், நினைவுச் சதுக்கத்தை வந்தடைந்ததும், நினைவுதின நிகழ்வுகள் இடம் பெறும்.

இவைதவிர்ந்த கிளிநொச்சி, வவுனியா வடக்குப் பிரதேசத்திலும் மல்லாவி மாவீரர் மண்டபத்திலும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்திலும் நினைவுதின நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

## அரசுக்குள்...

நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதிலலை என்று முடிவெடுத்தோம். இதனால் தேசிய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஏனென்றால், நிஜத்தில் எது பிரச்சினை என்று அடையாளம் கண்டு அதனைத் தீர்க்கவேண்டும்.

இடைக்காலத் தன்னாட்சி குறித்த பிரேரணை அடிப்படையில் பேச்சுவார்த்தையைத் தொடக்க அரசு தயாராக இருக்கின்றதா என்ற கேள்விக்கு அது முறையாகப் பதில் தராத நிலையில் எப்படிப் பேச்சுவார்த்தையைத் தொடங்கமுடியும்.

இந்தப் பிரேரணைகள் குறித்து ஜே.வி.பி கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. அதுதான் ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதைத் தடுக்கிறது.

அது அரசுக்கு உள்ளே இருக்கும் பிரச்சினை. இது அதற்குள்ளேயே தீர்க்கப்படவேண்டும். அதில் எதிர்க்கட்சிகள் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், சமாதானப் பேச்சுக்கள் தொடங்கும் பட்சத்தில் அதில் தீவிரமாகப் பங்காற்றத் தயாராகவே இருக்கிறோம்.

அப்படியிருக்கும்போது அரசு ஒரு காலம்கடத்தும் உத்தியாக இதைச் செய்கிறது. இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையிலோ, ஒஸ்லோ ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ பேச்சுக்களை முன்னெடுக்கும் பட்சத்தில் நாங்கள் முழுமையாக ஆதரிப்போம் என்று ஜனாதிபதியிடம் பலமுறை தெரியப்படுத்தியிருக்கிறோம் என்று பீரிஸ் மேலும் கூறினார்.

### ஊர்காவற் படையினரின் விவகாரம்

## அரசதரப்பு விசேட பிரதிநிதி திருகோணமலைக்கு விரைவு!

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவற் படையினரையும் விடுதலை செய்வது தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கு - அரசாங்கம் விசேட பிரதிநிதி ஒருவரை திருகோணமலைக்கு அனுப்பியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்-இதுகுறித்த பேச்சுவார்த்தையொன்றிற்காக கிளிநொச்சிக்குச் சென்றுள்ளதால் அரசதரப்புப் பிரதிநிதியால் புலிகளுடன பேச்சுநடத்த முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

கோமரங்கடவலவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடிய இரு ஊர்காவற் படை வீரர்க்களை விடுதலைப்புலிகள் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற் படையினரையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி கைதுசெய்யப்பட்டுள்ள ஊர்காவற் படை வீரர்களின் உறவினர்கள் 29 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

இந்த நிலையிலேயே அரசாங்கம் விசேட பிரதிநிதி ஒருவரை திருகோணமலைக்கு அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

### புலிகளின்...

டாட்சி விவகார அதிபருமான புலேந்திரனும் கலந்துகொண்டார்.

இதேவேளை ஜெனீவாவில் தங்கியுள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் விவகார குழுவினரை ச்ர்வதேச மனித உரிமை ஆணையாளர் இய்ன் மார்ட்டின் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியதும் குறிப்பிடத்தக்கத.

### ஜெனிவா...

களுடனான கலந்துரையாடலை அடுத்து - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலை முடித்துக்கொண்ட பின்னரே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அடேல் பாலசிங்கம் ஆகியோர் லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## புலிகள் பேச்சுக்கு...

பகிரங்கமாகவும், சகல தரப்புக்களை சேர்த்துக்கொண்டு நடத்தும் கொள்கையை அரசாங்கம் கொண்டு நடத்தும் கொள்கையை அரசாங்கம் கொணடிருக்கிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சிவில், சமூக மதத்தலைவர்கள் போன்றவர்களின் பங்களிப்பு இல்லாமல் நிலையான சமாதானம் உருவாகமாட்டாது.

மக்களுடன் விரிவாகவும் தொடர்ச்சியாகவும் கலந்துரையாடுவதற்கு சிறந்த கட்டமைப்புடன்கூடிய அமைப்பொன்று தேவைப்படுகிறது.

எதிரணியில் உள்ள கட்சிகளும், சமயத் தலைவர்களும் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக கொள்ளப்பட்ட பின்னரே தேசிய ஆலோசனைச்சபை என்ற கருதுகோள வகுக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கும் நாட்டின் பிரஜைகளுக்குமிடையிலான சமாதான நடைமுறைகள் பற்றிய கலந்துரையாடலுக்கான தேசிய மன்றமாக இந்தப் பேரவை செயற்படும்.

பேச்சுவார்த்தை நடைமுறையின் முன்னேற்றம் பற்றி மக்களுக்கு விளக்கம் அளித்துவரும் அமைப்பாகவும் இது அமையும். அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கான ஏற்பாட்டாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்.

அதேவேளை, தேசிய ஆலோசனைப் பேரவையின் மக்கள் பிரதிநிதிகள ஊடாக தேசத்துடன் பிரத்தியேகமாக கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளும். நாட்டில் வாழும் சகல சமூகத்தினரின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வை அரசாங்கம் நாடிநிற்கிறது. அந்தத் தீர்வு ஜனநாயக ரீதியாகவும் பன்முகத் தன்மைகள் கொண்டதாகவும் காணப் படும்.

அரசாங்கத்துக்கும் தமிழ் சமூகத்தில் வாழும் தேசிய சிந்தனைப் போக்குஉடையவர்களுக்குமிடையிலான முரண்பாடுகளை அரசாங்கம் கட்டாயமாகத் தீர்க்கவேண்டியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தரத் தீர்வுகாணப்பட்டு அமுலாக்கப் படும் கால இடைவெளியில் இடைக் கால நிர்வாகத்தை அமைப்பது என்ற கருதுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது.

இடைக்கால நிர்வாகமும், இறுதித்தீர்வும் - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட ஒஸ்லோ பிரகடனத்துக்கு அமைவாக இருக்கவேண்டுமென உறுதிமொழியை விடுதலைப் புலிகள் வழங்கவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வு காணவேண்டும் என பிரகடனம் முன்மொழிவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க குறிப்பிட்[illegible] அங்குரார்பண வைபவம் தொடங்[illegible]வதற்கு முன்னர் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய திபிட்டுவாகே சித்தானந்த சுமங்கலதேரர் பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா, மௌலவி.எம்.புகாரி, ஆயர் தியானி பெர்னாண்டோ ஆகியோர் சமயக் கிரியைகளை நடத்தினர்.

இந்த ஆலோசனை சபைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், ஜே.வி.பியின பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, மல்வத்துபீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய திபிட்டுவாவே சிறி சித்தானந்த சுமங்கல தேரர் மற்றும் பல அரசியல், மதத் தலைவர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

## எதிர்க்கட்சிகள் வழங்குகின்ற...

ஜெனீவாவில் முக்கியமான மாநாடு ஒன்றை நடத்திக்கொண்டிருக்கிறோம். அரசியல் விவகாரக் குழு கூடியிருக்கின்றது. தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடக்கமான இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் அதிகாரபூர்வமாக முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்கவேண்டும் என்பது சம்பந்தமாகவும், பேச்சுக்கள் தொடங்குகின்றபோது முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் நாங்கள் கூடுதலான நேரம் விவாதித்து பல விடயங்களைத் தீர்மானித்திருக்கிறோம்.

எங்களுடைய அரசியல் விவகாரக்குழு, எதிர்கால அரசியல் முன்னெடுப்புச் சம்பந்தமான தீர்மானங்களை எடுத்து, எங்களின் தலைமைப் பீடத்தின் கவனத்துக்குக் கொண்டுபோக இருக்கிறோம். அத்தோடு, நாங்கள் இந்தப் பயணத்தின்போது ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்று பல இராஜதந்திரிகளைச் சந்தித்து எங்களுடைய நிலைப்பாடுகளை தெளிவாக்கி இருக்கிறோம்.

*கேள்வி* :- அரச அதிகாரிகளையும் சந்திக்கிறீர்களா?

*பதில்*:- நிச்சயமாக. பல நாட்டு அரச அதிகாரிகளையும் சந்திக்க இருக்கிறோம்.அவர்களுக்கு எங்ளுடைய நிலைப்பாடு சம்பந்தமாக தெளிவாக்க இருக்கிறோம். ஏனெனில், இன்று பரந்தளவில் இந்த சமாதான முன்னெடுப்புக்களுக்கு விடுதலைப் புலிகளே தடையாக இருப்பதாக ஒரு தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பினதும், தலைமைப்பீடத்தினதும் நிலைப்பாட்டினை சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் தெரிவிக்கவேண்டிய கடப்பாடு இருக்கிறது. அந்தவகையில் எங்களின் இந்தப் பயணம் அமையும் என்று நினைக்கின்றேன்.

*கேள்வி* :- ஜனாதிபதியால் நியமிககப்பட்ட குழு ஒன்று கொழும்பில் கூடியது குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில* :- எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் குழுக்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில், ஏற்கனவே ஜனாதிபதியால் கடந்த ஆட்சிக்காலங்களில் இப்படியான குழுக்கள் பல அமைக்கப்பட்டு பல வட்டமேசை மாநாடுகள் நடத்தப்பட்டு இருக்கின்றன. இது போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டு ஆக்கபூர்வமான எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எங்கள் மக்களுக்கு நன்மையளிககக்கூடிய, எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய ஆக்கபூர்வமான எந்தத் தீர்மானங்களையும் இவர்களால் கடந்த காலத்தில் எடுக்கமுடியாமல் போய்விட்டது.

அந்த வகையில் எங்களுக்கு இந்தக் குழுக்கள் அமைப்பதில் நம்பிக்கை இல்லை. இது சம்பந்தமாக ஏற்கனவே எதிர்க்கட்சி கூட இதை ஏகமனதாக விமர்சனம் செய்திருக்கின்றது. அத்தோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இது சம்பந்தமாகத் தங்களுடைய கருத்துககளை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுததவரையில் இந்தக்குழு கூடுவதால் எந்தவித தீர்மானத்துக்கு அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. இது பேச்சுவார்த்தை முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நீண்டகாலத்தை இழுத்தடிக்கும் உத்தியாக இந்தக் குழுக்கள் அமைக்கின்ற செயற்பாடுகளைப் பார்க்கின்றோம்.

ஏனெனில் தற்பொழுது பேச்சு[illegible]களை தொடங்கக்கூடிய சாதகமான சூழல கனிந்திருக்கின்ற இந்த நிலையிலும், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு காலத்தைக் கடத்திவருகின்ற நிலைமையைத் தான் அவதானிக்கிறோம்.

ஏனெனில் எதிர்க்கட்சிகள்கூட இந்தப்பேச்சுக்களைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை தொடங்குவதற்கு தமது பூரண ஆதரவைத் தருவதாகக் கூறியிருக்கின்றன.

அந்தவகையில் அரசாங்கத்துக்கு முழு அளவிலான ஆதரவு கிடைத்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் முன்வநது பேச்சுவார்த்தை சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்ததென்பது இதுதான் முதல்தடவை. இதை இந்த அரசாங்கம் சரியாகப் பயன்படுத்திக்கொணடு பேச்சுக்களைத் தொடங்கலாம்.

*கேள்வி* :- ஐரோப்பிய நாடுகளுக்கு இப்பொழுது பயணம் மேற்கொண்டிருக்கிறீர்கள். இதற்குப் பின்னர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

*பதில்* :- நாங்கள் இலங்கை அரசாங்கத்தினுடைய நேர்மையீனத்தை சர்வதேச சமூகத்துக்கு தெளிவாக்க இருக்கிறோம். சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்படலாம் என்று கருதுகிறோம். அந்தவகையில் சர்வதேச சமூகத்துக்கு எங்கள் மக்களுடையதும், தலைமைப்பீடத்தினதும் தெளிவான நிலைப்பாடுகளையும், இன்றைய சூழ்நிலைகளையும் தெளிவாக்குவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.